Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்–14 வெள்ளி–01 28–06 மார்ச் 2003

## மகிழ்வுடன் ஈழநாதம்





## 14வது ஆண்டில் ...

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 28 .02.2003

# தேசியத் தலைவர் வழங்கிய கௌரவமும் உணர்த்திய பொறுப்பின் ஆழமும்...

"எமது போர்வாளின் கூர்மைக்கு இவ்வளவு பயப்படுகின்றவர்கள் எமது எழுத்தின் கூர்மைக்கு எவ்வளவு பயப்படு வார்கள்"

என்ற இந்த அர்த்தமும் அழுத்த மும் மிக்கவார்த்தைகள் எமது தேசியத்தலைவரின் வாயிலிருந்து வெளிவந்த அன்றைய நாளின் அந்த மணித்துளிகளின் போது அங்கு குழுமியிருந்த படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், அனைவரும் தங்களின் ஆற்றலின் மகத்துவத்தை தாங்களே உணர்ந்து உள்ளூர சிலிர்ப்படைந்திருக்கவே செய்வர்.

அவர்களுக்கு எமது தேசியத் தலைவர் வழங்கிய பாராட்டும் அங்கீகாரமும், கௌரவிப்பும் அவர்களுக்குள் ஓர் புத்துயிர்ப்பை நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும்.

ஒரு தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டத்தில் எவராலுமே புறக்கணிக்கப்படமுடியாத சக்திமிக்க ஆயுதம் 'எழுதுகோல்' என்பது வரலாற்றால் நிரூபிக்கப்பட்ட உண்மை. இது எமது விடுதலைப் போராட்டத்திலும் நிரூபிக்கப் பட்டுள்ளது.

இந்த நிருபணத்திற்கு கிடைத்த உயர் அங்கீகாரம், ஈழநாதம் மக்கள் தினசரியின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு அதன் பணியாளர் களுக்கும், படைப்பாளிகளுக்கும் வழங்கிய உயர் கௌரவத்தின் மூலம் நன்கு உணரப்பட்டுள்ளது.

" மிகவும் நெருக்கடி மிக்க, ஆபத்துமிக்க, போர்ச் சூழலில் இடப்பெயர்வுகளின் போது ஈழநாதம் நிறுவனமும் பல தடவைகள் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து தளராது ஆற்றிய சேவை களத்தில் போராடுவதற்கு ஒப்பாகக் கூடியது" என்று அன்றைய தினம் உதிர்த்த தலைவரின் கூற்றால் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையின் பக்கம் நிற்றல் என்ற கொள்கையை மிகவும் உறுதியுடன் மேற்கொண்ட ஈழநாதம் தினசரியின் பணியாளர்களும் ஏனைய பங்காளர்களும் எமது தேசியத் தலைவரால் மிகவும் மதிக்கப் பட்டிருக்கிறார்கள். இது ஒரு பெருமிதத்திற்குரிய நிகழ்வு

"இது ஒரு தொழில் அல்ல. இது ஒரு பணியாகும்" என அவர் அவ்விழாவில் பேசும்போது குறிப்பிட்டமை இதனைத் துல் லியமாக விளக்கியது.

எமது தேசியத்தலைவர் பத்திரிகை யாளர்களை, ஊடகவியலாளர்களை, படைப்பாளிகளை, கலைஞர்களைச் சந்திப் பதிலும் அவர்களுடன் உரையாடுவதிலும், அவர்களைக் கௌரவிப்பதிலும், எவ்வளவு விருப்பார்வம் கொண்டவர் என்பது அனைவரும் நன்கு அறிந்து கொண்ட விடயமே.

ஊடகவியலாளர்களையும், ஆக்க இலக்கிய கர்த்தாக்களையும் , கலைஞர் களையும் போராளிகளாகவேமதிக்கும் அவரது பண்பும் அவர்களின், விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்புகளை புரிந்து கொண்டு மனந்திறந்து பாராட்டி கௌரவிக்கும் ஆத்ம விருப்பும் , முன்னரும் பலதடவைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப் படுத்தப்பட்டுள்ளன.

எனினும் ஒரு மக்கள் நாளிதழின் 13 ஆண்டு இடர்மிகு பயணத்தை அதன் பெறுமானத்தைக் கௌரவித்தமை அவர்களுக்குக்கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்.

'எப்போதும் மக்களுக்கு உண்மைகளை தெளிவுபடுத்துதல் வேண்டும்' என்று அவர் அன்று அவர்களுக்கு கூறியதன் அர்த்தம் மிக ஆழமானது.

ஒரு மக்கள் சார்பு ஊடகம் எப்படிச் செயற்பட வேண்டும் என அவர் எத்தகைய மனஉணர்வுகளை கொண்டுள் ளாரோஅதுவே ஈழநாதத்தின் இலக்கும் கூட அதனை முடிந்தவரை முழுமையாக்க முயல்வதே என்றென்றும் இந்த மண் ணுக்குச் செய்யும் பணியாகவும் இருக்கும்.

தேசியத்தலைவரின் வார்த்தைகள் எமக்கான தேசியக் கடமையை வலியுறுத்துவதாக வே இதயத்துள் பதிந்துள்ளன.

அவர் கூறியது போன்று இது ஒரு தொழி லல்ல... ஒரு பணி... அதுவும் தேசியப்பணி.....

# நாங்களும், அவர்களும் தூரனின் பார்வையில்

# சமாதான தீபங்களும், குப்பிவிளக்குகளும்

ஊடகங்களின வெளியான அந்த விளம்பரங்கள் கவர்ச்சியானதாக மட்டுமல்ல மனதிற்கு இதமானதாகவும் எல்லாருக்கும் ஒரு நம்பிக்கை மலர்ச்சியை ஏற்படுத்தியே இருக்கும்

'எல்லோருக்கும் சமாதானம்'

'என்றென்றும் இதே அமைதி'

'அந்த வெடியோசைகள் இனி எமக்கு வேண்டாம்'

என்று அந்த விளம்பரங்களில் காணப்பட்ட ரம்மியமானவார்த்தை களுடன் அவற்றில் பிரசுரிக்கப்பட்டிருந்த மழலைகளின் முகங்களைப் பார்க்கும் எவருக்கும் உடனேயே ஒரு கவன ஈர்ப்பு ஏற்படவே செய்யும்.

கள்ளம் கபடறியா அந்த குழந்தைகள், சமாதானத்தை யாசிக் கின்ற பாவனையைக் கொண்டிரா விட்டாலும், கூட தங்களின் நிர்மலமான பார்வைகள் ஊடாக எதனையோ சொல்ல முயல்வதாகத்தான் எவர்க்கும் படும்.

போர்நிறுத்தப்பட்டு, புரிந்து ணர்வு உடன்படிக்கை கைச்சாத்தி டப்பட்டு ஓராண்டு ஓடியே போய்விட்டது.

தென்னிலங்கையில் போரின் அச்சம் நீங்கிய, வெடிகுண்டுகளின் ஆபத்தற்ற சோதனைச்சாவடிகளின் நெருக்குவாரமற்ற, இராணுவ பிரசன் னத்தின் ஆதிக்கம் குறைந்த இந்த ஓராண்டு காலப்பகுதிக்குள், அப்பகுதிமக்கள் அநுபவித்துவரும் நிம்மதியான வாழ்க்கை அவர்களைச் சமாதான தீபங்களை சந்தோசத்துடன் ஏற்றவைத்திருப்பதில் வியப்பில்லை.

அதற்கு வழிவகுத்த விடுத லைப்புலிகளுக்கு அவர்கள் நன்றி சொல்லியே ஆகவேண்டும்.

அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டு, மகிழ்ச்சிப் புன்னகையை வீசி, கைகளில் தீபமேற்றி சமாதான கீதங்களை பாடுகிறார்கள் என்றால் அதில் அர்த்தம் இருக்கவே செய்கிறது.

சமாதான விளம்பரங்களில் வெளியான அழகொளிரும் அந்தச் சிறுவர் சிறுமியரின் காதுகளில் துப் பாக்கியின்- விமானத்தின் குண்டு வெடி ப்புச் சத்தமே கேட்டிருக்காது. அவர்கள் பார்வையில் தம்பெற்றோர், சகோதரர், உறவினர் நண்பர்கள், அயலவர்கள் என இராணுவ அட்டூழியங்களால் இரத்தமும் சதையுமாக சிதறிப்போன ஏக்கக் காட்சிகள் தென்பட்டிருக்காது, இயற் கையின் கொடுமைகள் சீற்றங்களுக்கு முகம் கொடுத்து காடும் வெளியுமாக அலைந்த அவலத்தின் அதிர்வுகள் அவர்கள் மனங்களைப்பாதிக்காது. முட்கம்பி வேலிகளுக்கும் அப்பால் தாம் தவழ்ந்த- வளர்ந்த- நடந்த- வாழ்ந்த மண்ணைத் தீண்ட முடியாது குறிபார்த்து நிற்கும் துப்பாக்கி முனைகளுக்கு அஞ்சித் தலை குனிந்து ஏக்கப்பெருமூச்சு விடும் துயரம் அவர்களை ஆக்கிரமித்தி ருக்காது, பதுங்குகுழிக்குள் வாழ்ந்த வாழ்விலிருந்து தற்காலிகமாக மீண்டாலும் இடிபாடுகளுக்குள் ஒதுங் கிக்கிடக்கும் துன்பத்தை அவர்களின் பிள்ளைகளைப் போன்று அவர்கள் அநுபவித்திருக்கமாட்டார்கள்...

அதனால் அவர்கள் மகிழ்ச்சி யாகப் புகைப்படத்திற்கு அலங்கரிக் கப்பட்ட நிலையில் புன்னகைத்து நின்று, சமாதானத்தின் சான்றுகளாக பிரச்சாரத் திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளார்கள்...

அவர்களிற்கு இதுவும் கூட ஒரு 'அரசியல்' என அறியாத பருவம். சமாதான அரசியலுக்கு பிரச்சாரசாதன மாக்கப்பட்டுள்ளார்கள். அவ்வள வுதான்....

ஏன் வடக்கு கிழக்கில் எமது குழந்தைகளின், அச்சமும், பீதியும், துயரும், சோகமும் இல்லாமையும், இயலாமையும், வறுமையும், இழப்பும் கவிந்த முகங்களை இவர்களால் சமாதா னத்தின் தேவையை, அவசியத்தை வலியுறுத்தத் தென்பகுதி இனவெறி யர்களுக்கு உணர்த்த, கடந்த பல தசாப் தங்களாக தமிழ்மக்கள் பட்ட அவலம் குறித்து தென்பகுதி மக்களை சிந்திக்க




வைக்க சமாதான ஓராண்டு நிகழ்வுகளின் பிரச்சார நடவடிக்கைகளில் பிரசுரிக்க முடியாது போய்விட்டது.

சோகம் ததும்பிய, துயர் கவிந்த, ஏக்கம் தழுவிய அந்த முகங்கள் சமாதானம் குறித்த பல செய்திகளை உணர்வு பூர்வமாகக் கூறியிருக்குமே... அது சமாதானம் குறித்து உணர்ச்சியுள்ள தென்பகுதி மக்களை (இனவாதிகளை- மதவெறியர்களையல்ல சிந்திக்க வைத்திருக்குமே....

ஏன் செய்யவில்லை?

அது அவர்களைப்பாதிக்கும்... அவர்களை இனங்காட்டும், அவர்களை நோக்கி குற்றம்சாட்டும் பாவனையில் மக்களை விரல் சுட்டிக் காட்டவைக்கும், அவர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு இடையூறாகிவிடும்... எல்லாவற்றையும் விட அவர்களின் மனச்சாட்சிகளையே உறுத்தும் (உணர்ச்சியுள்ளவர்களாயின்) இந்த அச்சம் தானே காரணம்

தென்பகுதி மக்கள் ஏற்றும் சமாதான ஒளியில் எல்லோரது கண் களையும் கூசச் செய்து துயர இருட்டை, அவலக் கொடுமையை, அடக்குமுறைக் குள்ளான வாழ்வை மறைக்கவே அரசாங்கம் முயன்று ள்ளது.

அவர்கள் சொல்லும் செய்தி இதுதான் 'தென்பகுதி மக்கள் சமாதா னத்தின் லாபத்தை அநுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள்...' அவ்வளவுதான்.

■■

இதோ இந்த நீண்ட நெடும் யாழ் கண்டிவீதியால் தென்பகுதியில் இருந்து வட பகுதிக்கு 'உல்லாசப்பயணம்' மேற்கொண்டு வரும் தென்பகுதி மக்களே சர்வதேசப் பிரமுகர்களே.. மனித நேயப்பணியாளர்களே.. ஏனையோரே.. இன்னமும் அகற்றப் படாத சுருள்படிந்த முட்கம்பிச் சுருள்கள்.. கண்ணிவெடிகவனம் என்ற வாசகத்தை மண்டையோட்டுப்படத்துடன் கொண் டுள்ள எச்சரிக்கைப் பலகைகள், குண்டும் குழியுமான வீதியின் இருபுறமும் இடிந் தும் சிதைந்தும் போயுள்ள குடியிருப் புகள், பாடசாலைகள், வணக்கஸ் தலங்கள், ஏனைய கட்டிடங்கள், ஆங் காங்கே உங்களின் வாகனவேகங்களால் ஏற்படும் புழுதி மண்டலங்களுக்குள் புதையுண்டு போய் மறையும் இழப்பின் சுமைகளின் வடுக்களைத்தாங்கிய மனித முகங்களை, வரண்டு காடுபற்றியவள மான நிலங்களை, போரின் வடுக் களைச்சுமந்த தமிழர்பூமியை நன்றாக உற்றுப்பாருங்கள் சிலவேளை மாவீரர் துயிலுமில்லங்களைக்கூட நீங்கள் பார்க்க நேரிடலாம் மாவீரரின் நினைவுச் சின்னங்களைக் கூடக்காண நேரிடலாம்.

அவற்றின் அருகே புகைப்படம் எடுத்துக் கொள்வதில் ஏதோ வரலாற் றுடன் உங்களையும் இணைத்துக் கொள்ளும் பூரிப்பும் ஏற்படலாம்.

இந்த பொட்டல் வெளியா ஆனையிறவு எனப்பிரமிப்பும்- சிலவேளை ஏமாற்றமும் கூட அடையலாம்.

(15ம் பக்கம் பார்க்க..)

# சோதனைக்குள்ளாகும் சமாதானம்



**மாங்குளம்** சந்தியில் உள்ள தேனீர்க்கடை உரிமையாளர் ஒருவர் சொன்னார் மானிப்பாய்ச் சம்பவத்தைத் தொடர்ந்து கடைகளில் விற்பனை வீழ்ச்சி கண்டுள்ளது என்று. மானிப்பாய்ச் சம்பவத்தையடுத்து கண்டி வீதி வழியாக வந்து போகும் பயணிகளின் தொகை குறைந்து கொண்டு வருவதே இதற்குக் காரணம் என்றுமவர் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் படைவீரர்களின் முகங்கள் இறுகிக் காணப்படுவதாகவும் கடந்த ஓராண்டு காலமாக நிலவி வந்த சினேகபாவம் குறைந்து விட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

அங்கு முன்பு கைவிடப்பட்டிருந்த காவலரண்களை துப்புரவாக்கி புதுப்பிப்பதில் படையினர் ஈடுபடுவதாகவும் இரவுநேர ரோந்துகள் வழமைக்கு மாறாக அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

முகமாலைச் சோதனைச் சாவடியில் தமிழர்கள் மீதான சோதனைகள் அதிகரித்து வருவதாகவும் விசாரணைகள் வழமைக்குமாறாக கடுமையாயிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஒரு மானிப்பாய்ச் சம்பவத்தின் விளைவுகள் இவை என்று கூறிவிட முடியாது. அப்படிக் கூறுவது நிலமையின் தீவிரத்தையும் விபரீதத்தையும் குறைத்து மதிப்பிடவே உதவும்.

முதலாவதாக மானிப்பாய்ச் சம்பவம் எனப்படுவது ஒரு இடுப்புப்பட்டி விவகாரமோ அல்லது தற்செயலானதோ அல்ல.

அது முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பட்ட ஒன்று என்று நம்புவதற்கு ஆதாரங்கள் உண்டு.

மானிப்பாயில் உள்ள ராணுவ பிரிகேற் மிலிற்றரி இன்ரலிஜனைச் சேர்ந்தது என்றொரு தகவலுண்டு.

தவிர சம்பவம் நடந்த உடனேயே அங்கு கலகம் அடக்கும் பொலிசார் வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்களை அங்கு கொண்டு வரும் முடிவு யாழ் படைத்துறைத் தலைமைக்குத் தெரியாமல் எடுக்கப்பட்டிருக்க முடியாது.

எனவே அதையொரு இடுப்புப்பட்டி விவகாரமாக மட்டும் சுருக்கிவிட முடியாது.

பதிலாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் கையாலாகாத்தனத்தை அது பிரதிபலிக்கிறது.

சமாதானத்தைக் குறித்த ராணுவத்தின் மனோநிலையை அது பிரதிபலிக்கிறது.

மேலும் பெண்கள் பற்றிய ராணுவத்தின் மனோநிலையையும் அது பிரதிபலிக்கிறது.

இப்பொழுது இடுப்புப்பட்டி பற்றி ஒரு சமரசம் எட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இடுப்புப்பட்டிக்கு ராணுவத்தனத்தைக் கொடுக்கக் கூடிய பாகங்களை ஓரளவுக்குக் குறைப்பது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஒரு இடுப்புப்பட்டி விவகாரம் முழுச்சமாதான முயற்சிகளையுமே உலுப்பிவிடும் அளவுக்குத்தான் இலங்கைத்தீவில் சமாதானத்தின் கதி காணப்படுகிறது.

ஒரு இடுப்புப்பட்டி விசயத்தில் புரிந்துணர்வுக்கு வரவே இவ்வளவு சோதனைகளைத் தாண்ட வேண்டியுள்ளது என்றால் இறுதித் தீர்வு என்று ஒன்று வருவது எப்படி?

அதுவும் புரிந்துணர்வு உடன்

**நிலாந்தன்**

படிக்கைக்கு ஒருவயது ஆகியிருக்கும் ஒரு நிலையில்?

அப்படியென்றால் முன்னைய காலங்களைப் போலவே இம்முறையும் சமாதானம் சறுக்கப்போகிறதா?

ஆம். தமிழர்கள் பரவலாக அப்படித்தான் அஞ்சுகிறார்கள்.

மெய்யாகவே புரிந்துணர்வு உடன்படிக்கையின் பலம் அதற்குள்ள சர்வதேச பின்னணியும் ஆதரவும்தான்.

தனது தலைநகரில் பலவீனமானவராகக் காணப்படும் ஒரு பிரதமருடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கை அது.

இதனால் வேரிலேயே வீரியம் குறைந்த ஒரு உடன்படிக்கை அது.

சர்வதேச சமூகத்தின் பின்பலத்தால் முண்டு கொடுக்கப்பட்டு தூக்கி நிறுத்தப்பட்டிருக்கிறது அது என்பதே மெய்நிலை.

அதிலும் சமாதானத்துக்கு எதிரான பிராந்திய வியூகமொன்று பலமடைந்து வரும் ஒரு பின்னணியில் இத்தகைய ஒரு உடன்படிக்கை உயிர் பிழைத்திருப்பதென்றால் நிறையத் தியாகங்கள் செய்யவேண்டியிருக்கும்.



நெடுந்தீவில், மானிப்பாயில், கல்லம்பற்றையில் நடந்திருப்பவை உணர்த்துவது இதைத்தான்.

யதார்த்தத்தில் இம்முறை சமாதானம் அதிகமதிகம் புலிகளின் பொறுமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

மிகவும் அசாதாரணமாகப் புலிகள் சாதித்துவரும் பொறுமை அவர்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் மதிப்பையும் கொடுத்திருக்கிறது.

அதோடு சமாதானத்துக்கான நிதி திரள்வதற்குரிய வாய்ப்புக்களையும் அகலத் திறந்து விட்டிருக்கிறது. நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளோடும் ஆத்திரமூட்டும் யுத்தநிறுத்த மீறல்களோடும் இப்படியொரு புரிந்துணர்வு உடன்படிக்கை ஓராண்டு காலம் இழுபட்டது என்பதே ஒரு பெரிய விசயம்.

புலிகளின் பொறுமையும் முதிர்ச்சியும் சர்வதேச சமூகத்தின் பின்பலமும் தான் இதற்குக் காரணம்.

இனியும் சமாதான முயற்சிகள் முறிக்கப்படாதிருப்பதென்றால் மேற்சொன்ன இரண்டு விசயங்களும் தான் அதிகபட்ச காரணங்களாய் இருக்க முடியும்.

அண்மையில் அமைச்சர் மிலிந்த மொறகொட நெடுந்தீவுக்குப் போய்வந்த பிறகு நெடுந்தீவுச் சிக்கல் தொடர்பாக புலிகளுக்கு ஏற்புடைய ஒரு தீர்வு காணப்படலாம் போற தோன்றுகிறது.

மானிப்பாய்ச் சம்பவத்தால் உண்டாகிய கசப்புணர்ச்சிகளை தணிக்கும் ஒரு முயற்சியாக இது இருக்கக்கூடும்.

அதோடு, வரும் ஆறாவது கட்டப் பேச்சுக்களின் போது கிடைக்க விருப்பதாகக் கூறப்படும் நிதி உதவி சமாதான முயற்சிகளை பயன்பொருத்தமான விதத்தில் அதன் அடுத்த கட்டங்களுக்கு நகர்த்தும் என்ற ஒரு எதிர்பார்ப்பும் உடனடியாக சமாதானத்தை முறிக்க விடாதுதான்.

ஆனால் ஈழப்போரைத் தொடர்ச்சியாக கவனித்து வரும் யாருக்குமே வெளிப்படையாகத் தெரியும் ஒருண்மையுண்டு. அது என்னவெனில் புலிகளின் பொறுமையை எதுவரை சோதிக்கலாம் என்பது எந்தவொரு பாடப்புத்தகத்திலும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கவில்லை என்பதே... ■

---




செய்தி:- விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுவரும் வேளையிலும் சமாதானமோ, யுத்தமோ இரண்டிற்கும் தயாராகவே உள்ளோம். பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு.

மயிலர்:- பாதுகாப்பு அமைச்சர்... பாதுகாப்பாகத்தான் பேசியிருக்கிறார் பாருங்கோ... தன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த உடனேயே 'யுத்தமோ... சமாதானமோ...., என்ற ஜே.ஆர் காலத்து கோட்பாட்டிற்கு இறங்கீட்டார் பாருங்கோ... எல்லாரும் பேரினவாதத் தளத்திலை நிண்டு கொண்டுதான் சமாதானம் பற்றி வேதம் ஓதுகினம்... கதிரையில் இருக்கவும் வேணும் குதிரையில் பறக்கவும் வேணும் எண்டால் இப்பிடித்தான் பேசுவினம்.....

செய்தி:- புலிகளின் விமானம் குறித்து புலனாய்வு செய்ய வேண்டும் எதிர்க்கட்சித்தலைவர் கோரிக்கை.

மயிலர்:- விமானப்படைக்கான விமானங்கள் கொள்வனவு தொடர்பாக அம்மையாரின்ரை ஆட்சிக்காலத்திலை நடந்த ஊழல்கள் தில்லுமுல்லுகள் குறித்து முதல்லை புலனாய்வு செய்து முடிச்சிட்டு புலிகளின்ரை விமானம் பற்றி புலனாய்வு செய்யலாமெல்லே... கோடி கோடியாக் கொள்ளையடிச்சு கோடியளுக்கை கொண்டு போய்ப் பதுக்கீட்டு... எங்கட கொல்லப்புறத்தையெல்லே புலனாய்வு செய்யத்துடிக்கினம்... தங்கடை மானத்தை எங்கடை விமானத்தாலை மறைக்கப்பாக்கினம் போலை...

செய்தி:- ரத்வத்தைக்கு தெய்வ ஆசிவேண்டி கண்டி விகாரையில் விசேட பூசைகள் நடத்தப்பட்டன...

மயிலர்:- ஜெனரல் மாமாவை இனி ஆண்டவன் தான் காப்பாற்றவேண்டுமெண்டு முடிவெடுத்திட்டினம் போலை கிடக்கு... ஓ அதுவும் சரிதான் அதிகார அம்மணியே அன்பு மாமாவை கைவிட்ட நிலையில் ஆர்தான் காப்பாத்திறதாம்...? முந்தித்தான் இப்பிறவியிலை செய்யிறகுற்றத்திற்கு மறுபிறவியிலை தண்டனை கிடைக்குமென்பார்கள்... இப்ப ஜனவரியிலை செய்த குற்றத்திற்கு பெப்ரவரியிலை தண்டனை கிடைக்கிற காலம்.... ரத்வத்தை மாமாவுக்கு சோதனை மேல் சோதனைக்காலம் இது பாருங்கோ....!

செய்தி:- ஊரெழுவில் புதியமுகாம் அமைக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.....

மயிலர்:- அரசாங்கம் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக.. இராணுவத்தினருடனும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்திருக்குப்போலை... இருக்கிற முகாமை நீக்கச் சொல்ல, புதிய முகாம் அமைக்கிறதிலையெல்லே அதிக அக்கறை காட்டினம்... இதிலை தான் அரசாங்கத்தின்ரை இரண்டாவது முகம் தெரியுது பாருங்கோ... சமாதானம் என்னவோ சாண்ஏறமுழம் சறுக்கிற கதையாத்தான் போகுது..... எப்பவுமே படை சமாதானத்திற்கு தடைதான் பாருங்கோ..

செய்தி:- அடுத்தகட்ட பேச்சுக்கு முன்னர் புலிகள் போரைக் கைவிடுவதாக அறிவிக்க வேண்டும். பொ.ஐ.முன்னணி கேட்கிறது..

மயிலர்:- ஆயுதத்தை கைவிடவேண்டும் எண்டவை இப்ப போரைக் கைவிடவேண்டுமென்கினம்... கடைசியிலை பேச்சுவார்த்தையை கைவிடச் சொல்லியும் கேட்பினம்... போலை கிடக்கு... கைவிடத்தான் கோருகினமே யொழிய சமாதானத்திற்கு கைகொடுக்க அவைக்கு மனசில்லைப்பாருங்கோ... எல்லாத்தையும் கைவிட்டிட்டு நாங்கள் அவையிற்றை கைகட்டியும், கைநீட்டியும் நிற்கவேண்டும்... அது தான் அவையின்ரை விருப்பம்... கையாலாகாதவையின்ரை பேச்சைக் காது கொடுத்துக் கேட்பானேன்...?

இதுவரை நீ செய்தறியாததைச் செய்யும் ஆற்றல் பெறுவதே, கல்வியின் பொருள். - ஜே.பி.பால்பர்.

# நறுக்கென...

## சந்திரிகா - ஜே.வி.பி.. கூட்டு சமாதானத்தைக் குழப்பும் வேட்டு...



**சிறிலங்காவின** அரசியல் அரங்கில் எப்படியாவது - எந்த நடவடிக்கையைக் கைக்கொண்டாவது தம்மை முக்கியஸ்தர்களாக காட்டிக் கொள்வதில் ஜே.வி.பி.யின் பொதுச் செயலர் ரில்வின் சில்வாவும் - பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்சவும் ஒருவருக்கொருவர் சளைக்காது முனைப்புடன் செயற்படுபவர்களாகவே உள்ளனர்.

ஊர்வலம் - பேரணிகள் நடத்துவது, ஆர்ப்பாட்டம் செய்வது, பாராளுமன்றத்தில் பேசுவது, அறிக்கைகள் விடுவது என ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் தங்கள் பெயர் வருமாறு ஏதாவது செய்து கொண்டேயிருக்கும் நபர்களாகவே உள்ளனர். சனநாயக நீரோட்டத்தில் இணைந்து விட்ட 'கிளர்ச்சி'காரர்கள் என்பதை அடையாளம் காட்டியே வருகின்றனர்.

இப்போதைய அவர்களின் தொடர் போராட்டத்தின் மூலக்கரு - 'அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான உடன்படிக்கை நீக்கப்படும் வரை தொடர்ந்து போராட்டம் நடக்கும்' என்பதேயாகும்.

எதிர்க்கட்சியுடன் - அதாவது பொ.ஐ.முன்னணியுடன் தேர்தல் கூட்டு குறித்து இன்னமும் இறுதிவடிவம் எட்டப்படவில்லை என்றாலும் சந்திரிகாவின் ஆலோசகர் அநுராவுக்கு ஆலோசகராக விமல் வீரவன்ச மறைமுகமாக செயற்படுமளவுக்கு ஒரு'பொறியை' சந்திரிகாவுக்கு ஜே.வி.பி இறுக்கமாக உருவாக்கி விட்ட தென்றே கூறவேண்டும்.

சந்திரிகாவுக்கு ஜே.வி.பியை விட்டால் வேறு துணையில்லை... ஜே.வி.பிக்கு அநுராவை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலை. ஆட்சியை எப்படியாவது கலைத்து ரணிலை பதவியில் இருந்து அகற்ற சந்திரிகா தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென நிர்ப்பந்திக்கும் ஜே.வி.பி. சிங்கள இனவாதத்தின் தலைமையை தனதாக்கிக்கொள்ளும் ஒரு முயற்சியாகவே விடுதலைப்புலிகளுக்கும், சமாதானத்திற்கும் எதிரான பிரச்சாரத்தை தீவிரப்படுத்திவருகிறது. இடையே இதற்கு வலுக்கூட்ட அமெரிக்க எதிர்ப்பு, ஜப்பானிய எதிர்ப்பு, நோர்வே எதிர்ப்பு... என்ற செயற்பாடுகளையும் அடிக்கடி வெறும் அறிக்கைகள் மூலம் மேற்கொண்டே வருகிறது. இது தான் சந்திரிகாவுக்கு தீராத் தலைவலிதரும் விடயமாகியுள்ளது. அதாவது ஜே.வி.பியினர் எந்த அறிக்கை விட்டாலும் எவருக்கு அல்லது எதற்கு எதிராக தாமே சுயாதீனமாக அறிக்கைவிட்டாலும் அது 'சந்திரிகா'வின் பின்னணியில் அநுராவின் அநுசரணையுடன் மேற்கொள்ளப்படும் செயல்கலாகவேபாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சந்திரிகாவால் ஜே.வி.பியினரை உள்வாங்கவும் முடியவில்லை... வெளித்தள்ளவும் முடியவில்லை...

போதாக்குறைக்கு இந்திய -ஜே.வி.பி. உறவு வேறு சமாதான நகர்வுகளுக்கு எதிரான ஜே.வி.பியின் செயற்பாட்டை தீவிரப்படுத்துகையில் அவர்களைத் திருப்திப்படுத்த முடியாதநிலையில் சந்திரிகா திணறிவருவதும் கண்கூடு. தென்னிலங்கை அரசியலில் அரசியல் வாதிகள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் இயங்கவைக்கும் சக்திகளாக சமாதானமும் விடுதலைப்புலிகளுமே உள்ளதால் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி அனைத்துமே சமாதானத்திற்கான நகர்வுகளை கைவிடவும்மாட்டார்கள், சமாதானத் தீர்வொன்றினை எட்டவும் விடமாட்டார்கள் என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

## அமைச்சர் பாக்கீர் மார்க்காரின் அரசியல் உள்நோக்கம்...!



**ஐ.தே முன்னணி** அரசின் அதிபிரதான நோக்கம் என்னவென்று கேட்டால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது தான் என எவரும் கூறினால் நீங்கள் நம்பவேசெய்வீர்கள்.. அப்படித்தான் ரணில் முதல் கடைசிக் கட்சித் தொண்டர்வரை பிரச்சாரம் செய்துவருகிறார்கள்.

ஆனால், உண்மையான தங்களின் நோக்கம் என்ன என்பதை சிறிலங்கா அரசின் ஊடகத்துறை அமைச்சரான இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் அண்மையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதாவது ஜே.வி.பியைப் போன்று விடுதலைப்புலிகளையும் நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்திற்கு இழுத்துவந்து அவர்களைப் போன்று அரசியல் நடைமுறைகளில் பங்குபற்றவைப்பது தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான நோக்கம் என்று அவர் விளக்கியுள்ளார்.

அமைச்சர் பாக்கீர் மார்க்கார் உண்மையை மறைக்காது சொன்னமைக்கு நன்றி...

படுகொலைகள் , கொள்ளை நடவடிக்கைகள், களவுகள் போன்றவற்றை செய்த தீவிரவாதிகளான ஜே.வி.பியினரை- அந்தக் கட்சியை நாட்டின் பிரதான அரசியல் நடைமுறைக்கு இழுத்து வந்தது ஐக்கிய தேசியக்கட்சியே தான் என்றும் அவர் பெருமிதமாகக்கூறுகிறார்.

அதுசரி... அப்படிக் கூட்டிவந்தவர்களை கடந்தவாரம் கண்ணீர் புகைக் குண்டுகளையும், இரசாயனவாயுக் குண்டுகளையும் ஏவி ஓடஓடக்கலைத்தது ஏன் எனப்பாக்கீர் மார்க்காரைக் கேட்டால் என்ன சொல்லப்போகிறார்? அதுவும் சனநாயக நடைமுறையின் ஒரு வழிமுறை என்று கூறுவாரோ? ஆகட்டும்... புலிகள் எப்போது சிறிலங்காவின் பேரினவாத அரசியல் நீரோட்டத்தில் இணைய விரும்பினார்களாம்...?

விடுதலைப்புலிகளை அவர்களின் வழிமுறைகளை மறக்கவைத்து சனநாயக நடைமுறைக்கு சுலபமாகக் கொண்டுவந்து விடலாம் என்றும் அவர்கூறியிருப்பது, விடுதலைப் புலிகள் அமைப்பை, அதன் இலட்சியத்தை, அதன் செயற்பாட் டுறுதியை சரிவரப்புரிந்து கொள்ளாத அவரது 'அரசியல்' ஞானத்தையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

அப்படி ஒரு வரண்டதிட்டத்தைத்தான் ஐ.தே. கட்சியும் மறைமுகமாகக் கொண்டியங்கி வருமேயானால் அவர்களின் நோக்கம் கோமாளித் தனமானது என்பதை காலம் நிரூபிக்கும்...

புலிகளின் சமாதானத்திற்கான செயற்பாடுகள் பாராளுமன்றக்கதிரைகளை ஆக்கிரமிப்பதற்காக அல்ல என்பதை பார்க்கீர் மார்க்கார் புரியாமல் இருப்பது பரிதாபத்திற்குரியதே.

ஆக்கிரமிப்பாளர்களை எமது தாயகமண்ணில் இருந்து வெளியேற்றுவதற்காகத்தான் என்பதனை அவர் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அரசியலில்- கொள்கை ரீதியில்- வங்குரோத்து நிலையில் உள்ள ஜே.வி.பி சந்தர்ப்பவாதிகளின் இலக்கு பாராளுமன்ற கதிரைகள் என்பதால் பாக்கீர் மார்க்கர் போன்றவர்கள் தங்களின் நோக்கங்களுக்கு அவர்களை இணங்க வைத்திருக்கலாம்....

ஆனால் விடுதலைப்புலிகளின் விடயமே வேறு.. அவர்களின் இலட்சிய இலக்கும் வேறு...

அமைச்சர் பாக்கீர் மார்க்கார் தமது கட்சியின்- அரசின்-நோக்கம் அதுவேயானால் அதனை மாற்றிக் கொள்வதே நல்லது...

## தமிழர்களுக்கு 'நீதி' என்ற பெயரில் சிங்களதேசத்திற்கான 'நிதி' வசூலிப்பு



**சமாதானம** தள்ளாடுகிறதா? தடுமாறுகிறதா? அல்லது தவளுகிறதா? சிறிலங்காவின் சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கான முக்கிய நபரான அமைச்சர் பேராசிரியர் பீரிசைக் கேட்டால்-

'வெற்றிகரமாக முன்னேறுகிறது.... எதிர் பார்த்ததை விடவும் நம்பிக்கை தருகிறது' என ஒருக்கால் அரசியல்வாதிபோலவும்..

'பிரச்சினைகள் இருக்கவே செய்கிறது... ஆனால் சமாளித்து முன்னெடுத்துச் செல்கிறோம். தொடர்ந்து செல்வோம்' என்று இன்னொரு தடவை ஒரு பேராசிரியர் போலவும்...

'இருபதாண்டுப்பிரச்சினைக்கு... இரண்டொருமாதங்களில் தீர்வு காண முடியுமா' என மற்றொரு தடவை ஒரு நம்பிக்கை வரட்சி கொண்ட மனிதன் போலவும் பதிலளித்து வருகிறார்.

உண்மையில் அவர் என்னதான் நினைக்கிறார்? எதை இலக்குவைத்து செயற்படுகிறார்? என்றால், நிரந்தரசமாதானத்திற்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தை என்றில்லாமல் நீடித்த பேச்சுவார்த்தைக்கான நிரந்தர சமாதான நகர்வொன்றினையே அவர் குறிவைத்துள்ளார் என்பதனையே பதிலாகப் பெறமுடியும். சமாதானத்தை உடனடியாக ஏற்படுத்தக்கூடிய தீர்வுஎதனையும் உறுதியாக முன்வைக்கக்கூடிய வல்லமை அரசுக்குக்கிடையாது

அரசும், பேரினவாதிகளும், சிங்களமக்களும் தமிழ்மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் தீர்வொன்றினை காலதாமதமின்றி முன்வைக்கக்கூடிய பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக இல்லை...

வெளிச்சக்திகளின் அபிலாசைகளைப் புறந்தள்ளி விட்டு அவர்களின் அறிவுறுத் தல்களை மீறி இனப்பிரச்சினைக்கு சுயமாகத் தீர்வு காணும் மனோபலமும் சிறிலங்காவுக்கு கிடையாது....

இவையனைத்தும் அமைச்சர் பீரிசுக்கு தெரியாவிட்டாலும் பேராசிரியர் பீரிசுக்குத் தெரியும்...

எனவேதான் பீரிஸ் சமாதானப் பேச்சினை தேசம்தேசமாக நகர்த்தி, தொடர்ந்து பேசிக்கொண்டே காலத்தைக்கடத்தி.. அதனை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். என்பது தெளிவாகிறது. உதாரணத்திற்கு யப்பான்மீதான எதிர்க்கட்சிகளின் கண்டனங்கள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்று எச்சரித்துள்ள பீரிஸ் பாதகம் எதற்கு ஏற்படும் என்றால், 'சமாதானத்திற்கு' என விளக்கியிருப்பாரேயானால் சந்தோசப்பட்டிருக்கலாம். ஆனால் அவரோ பலநூற்றுக்கணக்கிலான மில்லியன் டொலர்களை உதவியாகத் திரட்டும் முயற்சிக்கு பாதகம் ஏற்பட்டுவிடும்.. தடங்கல் ஏற்பட்டுவிடும் என்றுதான் கூறியிருக்கிறார்.

இதன்போது அவர் ஒரு பௌத்த சிங்கள பேரினவாத அரசியல் வாதிபோலவே விளக்கமளித்துள்ளார்.

இன்றைய சமாதானம் தென்னிலங்கையின் வரண்டு கிடக்கும் திறைசேரியை நிரப்ப சிறிலங்கா அரசுக்கு மிகவும் தேவைப்படுகிறது... சமாதான நகர்வுநீடிக்கும் வரை தொடர்ந்து உதவி கிடைத்துக் கொண்டேயிருக்கும் என சிறிலங்கா அரசு நம்புகிறது...

தமிழர்களுக்கான உரிமைபற்றிப் பேசிக்கொண்டே சிங்களதேசத்தின் பொருளாதா ரத்தை நிமிர்த்திவிட சிறிலங்கா அரசு நினைக்கிறது போலும்....

பீரிசின் பேச்சுக்கள் இதனையே உணர்த்தி நிற்கின்றது...

## ராஜ...ராஜ... ராஜாதிராஜ... ஆறுமுகம் தொண்டமான்...



**தென்பகுதி** அரசியல் வாதிகளுள் அதிகளவுக்கு நிம்மதியாக இருப்பவர் ஒரே ஒருவர்தான்... அவர்தான் ஆறுமுகம் தொண்டமான்....

வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்தில் சிவாஜி கணேசன்..பற்களை நெரித்தபடி ராஜ,ராஜ,ராஜாதி, ராஜமாத் தாண்ட... என்று பொறிபறக்க வசனம் பேசி 'தொண்டமான் என்று தன்னை வெள்ளையரிடம் காட்டிக்கொடுத் தவரின் பெயரை ஒரு விதமாக உச்சரிப்பாரே... நினைவிருக்கிறதா. அதேபோல் எல்லோருக்கும் எல்லாக்கட்சிகளுக்கும் அநுசரணை வழங்கி அமைச்சுப்பதவியை பெற்று அனுபவிக்கும் தாத்தா தொண்டமானின் ராஜ தந்திரத்தை பேரனும் (ஆறுமுகம் தொண்டமானும்) அச்சொட்டாக அப்படியே கடைப்பிடித்து வருகிறார்.

எந்தக் கட்சி ஆட்சிபீடம் ஏறுகிறதோ, அவர்கள் நிச்சயமாக தொண்டமானின் ஆதரவை, அவருக்கே உரிய பாரம்பரிய அமைச்சை வழங்கி சுலபமாக பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்த்தே இருப்பார்கள்.

அதொன்றும் குற்றமில்லை.. அது தொண்டமான் பரம்பரையின் மரபு.

அண்மையில் அரசை மிரட்டியே தனது பேரங்களை முடித்துத் தனக்குச் சாதகமாக நிலைமைகளை மாற்றிக் கொள்ளும் தொண்டமான்.

நடத்திய இ.தொ.கா. மாநாட்டில்- ஆட்சிமாற்றம் ஏற்படும் பட்சத்தில் அடுத்த அரசிலும் தனது நிலையை உறுதிப்படுத்தும் மூலோபாய நகர்வுகளை மேற்கொண்டார் என்பதும் தெளிவான ஒன்றாகும்.

தொண்டமானைப் பாராட்டிப் பேசிய அநுரா பண்டாரநாயக்கா நிலைமையைத் தெளிவாகவே- பகிரங்கமாகவே உணர்த்திவிட்டார் அதாவது அவர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது-

'பொதுசன ஐக்கிய முன்னணி விரைவில் ஆட்சியமைக்கும். அந்த ஆட்சியில் தொண்ட மானும் அமைச்சராக இருப்பார். அதுவும் மிக முக்கிய அமைச்சுப் பொறுப்பு அவருக்குவழங்கப்படும்' என்று உத்தரவாதமளித்துள்ளார்.

ஆறுமுகத்தாருக்கும் இதை விட ஆறுதல் தரும் விடயம்வேறென்ன இருக்கமுடியும்.

அரசில் அமைச்சராக இருந்து கொண்டு, எதிர்கட்சியின் ஆதரவையும் எதிர்பார்ப்பையும் தக்கவைத்துக்கொண்டு, விடுதலைப்புலிகளுடனும் பேசிக்கொண்டு, ஜே.வி.பியின் எதிர்ப்பையும் அதிகம் பெறாமல், தனது உட்கட்சி அதிருப்தியாளர்களையும் அடக்கி வைத்தபடி அதிகாரக் கதிரையில் ஆபத்தின்றி இருக்கும் தொண்டமானுக்கு அநுரா வழங்கிய உத்தரவாதம் போதும் இந்த ஆட்சியில் இருக்கும் வரை 'ரணிலை' மிரட்டியே தனது அரசியல் பேரங்களை சாதகமாக முடித்துக் கொள்வதற்கு...

போதாக்குறைக்கு இந்திய ஆதரவு அவருக்கு பின்பலமாக இருக்கையில்... அவர் எப்போதுமே ராஜ,ராஜ ராஜாதிராஜ.. தொண்டமானேதான்.

செங்குட்டுவன்

# இடையால வந்தது என்ன?

**சும்மா** சும்மா அஞ்சு மணிக்கு சும்மா சும்மா அவளும் நானும் சும்மா சும்மா. எண்டொரு சினிமாப்பாட்டிருக்கு. சும்மா எண்ட சொல்லுக்கு கன அர்த்தம் பாருங்கோ. முன்னை அன்னை இல்லமெண்டு ஒரு படம் வந்தது. அதில ஒரு பாட்டு தேன்மொழியரசி தேவிகா நடந்து போவா பின்னால சிம்மக்குரலோன் சிவாஜி கணேசன் பாடுவார் நடையா இது நடையா ஒரு நாடக மன்றோ நடக்குது.

இடையா இது இடையா அது இல்லாதது போல் இருக்குது. இந்தப் பாட்டை அந்தக்காலத்து இளந்தாரியள் பள்ளிக்குப் போற பிள்ளையளைப்பார்த்துப் பாடுறதுண்டு. இதைவச்சு சிரித்திரன் சுந்தரண்ணை ஒரு பகிடி எழுதினவர். ஒரு பெடிச்சி நடந்து போறாள். பின்னால ஒரு வாலிபன் பாடுறான் - 'நடையா இது நடையா' எண்டு - பெடிச்சி மடையா அட மடையா எண்டு திரும்பிற மாதிரிப் படம் போட்ட பகிடி.

எனக்கேன் இப்ப இது நினைவுக்கு வருதெண்டா. பெண்டுகள் முன்னால போனா பார்க்க எண்டே ஒரு கூட்டம் இருக்கு. அதிலயும் பாருங்கோ ஒரு ஊருக்க கந்தையரும் செல்லையரும் இருக்கினம் - ஆனா ரெண்டு பேரும் ஜென்ம வைரியள். ஆனா கந்தையர் ரோட்டில வரக்க செல்லையற்ற பெடிச்சியோட ஆரோ ஒருத்தன் சேட்டை விட்டதக் கண்டிட்டார். "ஹ்ம்..." எங்கட ஊர்ப் பிள்ளையோட எவனடா சேட்டை விட்ட எண்டு பூவரசப் புடுங்க பொடியன் ஏன் அங்க நிக்கிது. பறந்திட்டான்.

அந்தக் காலம் மலையேறிப் போச்சு. இந்தக்காலம் ஊருக்கவந்த சிறிலங்கன் படையே உண்டு இல்லையெண்டு செய்தது எங்கட பிள்ளையள். அதுகள் ஆட்டி தள்ளுற அழகென்ன? வாகன மோடுற லாவகமென்ன? நிர்வாகஞ் செய்யிற நேர்த்தியென்ன? து..தூ...தூ.. மிளகாய் துடைச்சு அடுப்பில போடோணும் என்ர கண்ணே பட்டிரும்.

அப்பேர்கொத்த பிள்ளையளோட அடிபட மாட்டாமல் போய் ஆரியரத்தினா பிரபாகரன் வளக்கிற பேயள் எண்டானாம் எங்கட பிள்ளையள. அவ்வையார் ஒரு காலத்தில சொன்னா பாருங்கோ

மெலியார் வலிய விரவலரை அஞ்சார்
வலியார் தமைத்தா மருவிப்போய்.....
கட்செவியஞ் சாதே படர் சிறையப் புள்ளரைசைப் பார்த்து.

இருக்குஞ்சீர் குறைஞ்சு போனா எல்லாம் இப்படித்தான். காலங்காலமாத்தமிழன் இருந்த, தமிழனுக்குச் சொந்தமான மண்ணில நிண்டு கொண்டு, தங்களுக்குப் பாதுகாப்புக் கேக்கினம். ஆனா எங்கட சனத்தை மட்டும் நம்பிக்கொண்டு ஆயுதமில்லாம அரசியல் வேலையளுக்குப் போனது எங்கட பிள்ளையள்.

வில்லன் நம்பியார், எங்கட தம்பிமாற்ற எம்ஜியார்த்தனத்தைக் கண்டவர் எண்டு சொல்லேலாஅனுபவிச்சு நிண்டவர். எங்கட எம். ஜி. ஆரை வடிவாத் தெரியும் அவருக்கு நீங்கள் என்ன பாக்கிறியள்' M எண்டால் மணம். G எண்டால் குணம். R எண்டால் ருசி . அது தான் பாருங்கோ எங்கட மணம் குணம் ருசியெல்லாம் தெரிஞ்சவர் ஒரு அறிக்கை விட்டா ரெல்லே ஆயுதங்களைப் புலிகள் கையளிக்கோணுமாம்



மானிப்பாயில ரோட்டால போன பிள்ளையளுக்கு இடையில நடந்தது என்ன? எந்த

எண்டு.

எப்பிடிக் கதை "லேடவுண்'' எண்டு சொல்லிப் போட்டு பிள்ளையளின்ர இடுப்பில கைவைச்சவன். "ஹாண்டோவர்" பண்ணிவிட்டா என்ன செய்வான். எங்கட சனத்தின்ர பாதுகாப்பை அவரே கையில எடுத்து செம்மணி கோம்பயன் மணல் கல்லுண்டாய் வெளியெண்டு எல்லா இடத்திலும் பாதுகாப்பா வைச்சிடுவார்.

இல்லை நான் தெரியாமல்தான் கேக்கிறன். 'கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் கிழவனைத் தூக்கிமடியில வை எண்டமாரி, சனத்தின்ர பிரச்சினையெல்லாம் முடிஞ்சுது. இடுப்பில பட்டிகட்டியிருக்கிறதுதான் இப்ப சமாதானத்துக்கு இடைஞ்சலா நிக்குதோ.

எப்பிடி எப்பிடி உடுப்பு போடுறதெண்டது அவயவை விருப்பம். இடுப்பில கட்டினா என்ன தலையில கட்டினா என்ன அது எங்கட தனிப்பட்ட விசயம். விருப்ப மெண்டா நீங்களுங்கட்டுங்கோவன் ஆர் வேண்டாமெண்ட நாங்கள் சொல்ல வந்தநாங்களே. அட சீருடையிலதான் போக வேண்டாம் எண்டியள். நாங்கள் நாலு கலரிலும் போறம் அதுக்கென்ன?

இது சரி இந்தப் பட்டியப் பற்றி தெருவால போறவையோ முடிவெடுக்கிறது. இண்டைக்கு பட்டி கட்டாதை எண்டவை நாளைக்குப் பாவாடை கட்டாதை எண்டும் சொல்ல வருவினம்.

இலங்கையில ஒரு அரசியலமைப்புச் சட்டம் இருக்கு. இதில தண்டனைக் குரியது எண்டு எதை குறிப்பிடுகினமோ, அது குற்றம் தான். கறுப்புப் பட்டி கட்டுறது குற்றமெண்டு எந்தச் சட்டமும் போடவேயில்லை.

சரி, சட்டம்தான் வந்தாலும் சட்டப்படி குற்றம் செய்ததாகக் கருதப்படும் ஒருவரை கைது செய்து நீதிமன்றிலதான் விசாரிக்க வேணும். அதுகும் பொம்பிளையள குற்றவியல் நடவடிக்கைச் சட்டப்பிரிவு 30ன்படி பெண் ஒருவரைக் கொண்டுதான் கைது செய்யலாம் விசாரிக்கலாம்.

அப்ப இடையால வரையறைக்கையுமடங்காத சுத்த காவாலித்தனம். இல்லாட்டி வேற என்ன. இலங்கை ஒரு சனநாயக சோசலிசக் குடியரசு. இதுக்கெண்டு ஒரு வரையறுக்கப்பட்ட அரசியல் யாப்பு மெல்லே இருக்கு. ஒருநாளும் இல்லாத திருநாளா. சில வேலையள் நடக்கிற மாதிரி ஒரு நாட்டிலுமில்லாத திருநாடா இஞ்ச நடக்குது.

இல்லை. தெரியாமைத் தான் கேக்கிறன் உங்கட யாப்பு என்ன விண்ணாணமா அத்தியாயம் மூண்டில ஒரு விசேச அம்சத்த வச்சிருக்கு. அ... இதுக்கு முதல் வந்த யாப்புகள்ள இந்த அயிட்டம் எழுவத்தி



ரெண்டில தான் துவங்கினது. ஆர் ஆத்தை துவங்கினதுதான் மோளுக்குப் பிடிக்கேல்ல. இந்த

**மாயா**

அத்தியாயத்தில தான் பாருங்கோ 12 பிரிவில 2வது சரத்து சொல்லுது. இனம் மதம், மொழி,சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களில் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பரசையும் ஓரங்கட்டப்படுதல் ஆகாது." எண்டு.

எது கவனமாய்ப் பாருங்கோ அரசியற் கொள்கை காரணமாக -

இதில 11 வது பிரிவு "ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவான நடத்தைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது.

14ம் பிரிவு - 5வது சரத்து (ஊ) தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்... •

எப்பிடி எல்லாம் வடிவாப் பாத்திட்டியளோ இப்ப வாங்கோ தொங்கலுக்கு.

3ம் அத்தி, 17வது பிரிவு ஆளொவ்வருவரும் இந்த அத்தியாயத்தினது ஏற்பாடுகளின் கீழ் அவருக்குரித்தாகவுள்ள அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அல்லது நிர்வாக நடவடிக்கை மூலம் மீறப்பட்டமை தொடர்பில் அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பில் 126ம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இனி இந்தப் பிரச்சினைக்கு வருவம். தனிய ஒரு அரசியற் கொள்கைக்காக ஆயுதம் ஏந்திப் போராடினவை இப்ப சனநாயகரீதியில பேசிப் பாக்க வந்தாச்சு. அவனாரோ எழுதினமாதிரி.

பேரலைகளின் நடுவே
விலங்குகளை வேட்டையாடியவன்
இன்றோ
கடற்கரை மணலில்
கிழிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறான்.

நரிகளுக்கே
தந்திர வித்தைகள் காட்டி
சாகசம் செய்தவன்
குழி முயலாய்
புல்தின்று பதுங்கிக் கிடக்கிறான்.

நீங்கள் பிழையா விளங்காட்டி இன்னொண்டச் சொல்லுறன். நல்லாச் சப்பிப் போட்டு நித்திரை கொள்ளுறவனையும் பசியில களைச்சுப் போய் நித்திரை கொள்ளுறவனையும் வித்தியாசந் தெரியாமத்தான் எல்லாம் நடக்குது. பொலிஸ் ஓடினன்ஸ் எண்டும் கிறிமினல் புறசிச்சரெண்டும், சட்ட நடவடிக்கையள் இதே அரசியலமைப்பின்ர வெற்றிகரமான வெளியீடாக்கிடக்கு. இதின்ர 30வது பிரிவுஎன்ன சொல்லுது.

30 WHENEVER IF IS NECESARY TO CAUSEA WOMAN TO BE SEARCHED THE SEARCH SHALL BE MADE BY ANOTHER WO MAN WITH STRICT REGARD TODECENCY. ஓஹோண் டானாம்.

அப்ப இனி மறுவளமாப் பாப்பம். சாதாரண குடிமக்களவிட அரசியல்வாதியள் அல்லது அரசியலாளர் எண்டவையள் மக்களோட ஒரு நாளும் அரசாங்கம் சமமா வச்சுப்பாக்கேல்லத்தான்.

அரசியல் ரீதியா விடுதலைப்புலியள் இப்ப சர்வதேசமட்டத்தில VIP க்கள் தான், அதாவது VERY IM PORTANT PEVSON ஒரு உயர்மட்ட அரசியல் ஒப்பந்த அடிப்படையில எங்கட சொந்தமண்ணில வேலை செய்யிற இப்பிடி யான VIP பெண் கள். வீதியில வச்சு இழிவாக மிலேச் சத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கினமெண்டா, அந்த இடத்தில பொறுமை காத்த எங்கட புலி களுக்கு பூமாலை போட வேணும்.

நாங்கள் தான் உண்மையில நாலெழுத்தும் படிக்காத கூழ் முட்டை ராணுவமெண்டு ஊருலகத்துக்கு காட்டின அந்த மானிப்பாயில் சிப்பாய ளுக்கு நன்றி சொல்ல வேணும் பாருங்கோ.

மா புளிக்கிறது அப்பத்துக்குதிறம்! இஞ்ச பாருங்கோவன் உந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் எண்டும் சும்மா எண்டும் மக்களை மீளக்குடியேத்த நாடு நாடாத்தான் பறந்துபறந்து பேசுகினம். ஆனா,

ஒட்டிசுட்டான், புளியங்குளம், கனகராயன் குளம், கரிப்பட்ட முறிப்பு, பள்ளமடு, ஆண்டாங்குளம், பெரியமடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பரந்தன், பளை, இஞ்சயெல்லாம் மீளக்குயேற்றஞ் செய்யேல்லயோ இல்லாட்டி A9 பாதையால ஆனையிறவு தாண்டி இயக்கச்சி போகயில்லயோ அடியப்போல அண்ணன்தம்பி உதவமாட்டான் பாருங்கோ.

என்ன செய்யிறது இப்ப ஊரோடினா ஒத்தோடு உலகமோடினாக் கேட்டோடெண்டமாரி நாங்களும் கையக் கட்டி வாயக்கட்டி சீவிக்க வேண்டியிருக்கு. என்னமாரி உவயள நம்பி நம்பியாரெட்ட ஆயுதங்குடுப்பமோ. நீங்களொண்டு. "முழுக்குக்கு மீன் பொரிக்க பூனை தனக்குத் தனக்கெண்டிருந்துதாம்." ஆராரோ ஆதாயத்தோட கிணறு வெட்டுறான் நாங்கள் அயண்டயீனமா இருந்தா தூக்கிக்கொண்டு போகலாம் எண்ட எண்ணந்தான். உந்த மாதிரி எத்தினை பழத்தைத் திண்டு கொட்டையும் போட் டவன் தமிழன். தமிழன்ர கையில ஆயுதமில்லையிண்டா தெருவால போற நாயும் ஒருக்கா திரும்பிப்பாத்துத்தான் குலைக்கும். பின்ன-

இடையில கட்டுறபட்டிக்கு இடையாலகிடக்கிறவை சட்டம் போடுறதும் அப்பிடித் தான். ♠♠



# இனவாதம் கக்கும் இனவாதியின் குரல்

நவம்பர் 25 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான மாநாடு குறித்து சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் விவாதம் நடை பெற்றது. இவ் இருநாள் விவாதத்தில் கடந்த 30ம் திகதி பொ.ஜ. முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் திருவாய்மலர்ந்த வார்த்தைகள், இலங்கைத்தீவில் தமிழர்களுக்கென்றொரு தனி நாடு அமைவதின் அவசியத்தினை மீண்டும் வலிவுறுத்திக் கூறின.

எனது இக் கூற்று அசந்தர்ப்பமானது அல்லது குட்டையைக் குழப்புவதாக உள்ளது என முகத்தைச் சுழிக்கிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள் அந்தப் பெருமகனது உரையைக் கவனியுங்கள்.

"வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு வடக்கை அபிவிருத்தி செய்கிறீர்கள் எமது பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. மீண்டும் ஒரு கறுப்பு யூலையை உருவாக்காதீர்கள்." எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள் மீண்டும் ஒரு கறுப்பு யூலையை உருவாக்காதீர்கள இவ்வாறு கர்ஜித்தவர் எம்.கே. எஸ் குணவர்த்தன என்னும், சந்திரிகாவின் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினராவார்.

இந்தத் தகவலை வெளியிட்டது சிறிலங்காவின் அரச வானொலியே. ஏனோ ஏனைய இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் இதனைக் கண்டு கொள்ளவில்லை.

இந்தக் குணவர்தனவின் சீற்றத்தைக் கண்டு அழுவதா சிரிப்பதா? இப்போது சொல்லுங்கள் நான் ஏற்கனவே தெரிவித்தது அசந்தர்ப்பமோ, அபத்தமோ அல்ல அல்லவா?

இப்போது நாங்கள் இந்தக் கூற்றினை முற்பகுதி, பிற்பகுதி எனப் பிரித்து ஆராய்வோம். 'வடக்கு, வெளிநாட்டுதவிகளை அப்படியே உறிஞ்சி அபிவிருத்தியடைகிறது' என்ற கருத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? 30ம் திகதி இரவுச் செய்தியறிக்கையில் பலகையடிப்பதற்கான வயல் போலச் சேறும் சகதியுமாக, தண்ணீர் நிறைந்திருந்த A-9 வீதியை சக்தி தொலைக் காட்சி காட்டியது. யாழ். நகரின் மையத்தில் மின்சார நிலைய வீதி இன்னமும் பல்லிழித்தபடிதான் இருக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று திரும்பியிருந்த சிறிலங்காவின் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச இதே விவாதத்தில் உரையாற்றுகையில் "யாழ்ப்பாணத்தில் எதுவித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை" என அன்றைய தினமே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, நோர்வே மாநாட்டில் வழங்கப்பட்ட உதவிகள் 'நாடு முழுவதற்கும்' என்றே வழங்கப்பட்டுள்ளன என்பது வும், இந்த உதவியைக் கொண்டு இன்னமும் எந்த அபிவிருத்தி நடவடிக்கையும் நடைபெறவில்லை என்பதும் நீங்கள் அறிந்ததேயல்லவா? அப்படியாயின் என்ன சொல்கிறார் குணவர்த்தன?

இந்தப் புறநிலையில் "எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். மீண்டுமொரு கறுப்பு யூலையை உருவாக்காதீர்கள்" என்னும் குணவர்த்தனவின் கூற்றின் பிற்பகுதியின் தேவை என்ன? அர்த்தம் என்ன? பின்னணி என்ன?

போரா? சமாதானமா? என்ற ஜே.ஆரின் தமிழர் மீதான சவாலின் பின்னணியில் ஐ.தே. கட்சியின் தலைமையில் அப்போதய சிறில்மத்யூ ஐ.தே. கட்சிப் பிரமுகர்களினால் கொழும்பிலும் தென்னிலங்கையிலும் நடாத்தி முடிக்கப்பட்ட தமிழினச் சுத்திகரிப்பு நடவடிக்கையே கறுப்பு யூலை என அழைக்கப்படும் 1983 யூலை இனக் கலவரம் ஆகும். இதைப்பற்றிய ஆணைக்குழு ஒன்றை சந்திரிகா அம்மையார் கடந்த ஆண்டில் நியமித்து அதன் அறிக்கையையும் பெற்றுப்பத்திரமாக வைத்துமிருக்கிறார். இப்போது அவரின் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மற்றுமொரு கறுப்பு யூலைக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அதுவும் ஜே.ஆரின் பாணியில் சிறிலங்காவின் பாராளுமன்றில் வைத்து இந்த அறைகூவல் வந்திருக்கிறது. ஒரு வித்தியாசம் - இம்முறை இந்தக் குரல் வந்திருப்பது எதிர்க்கட்சி

**இ. விவேகானந்தன்**

யிடமிருந்து. சொல்லப்பட்டிருப்பது தமிழர்களை நோக்கி அல்லாமல் அரசை நோக்கியாகும்.

'யானையும் யானையும் மோதினால் இடையிலுள்ள தகரைப் பற்றை மிதிபடுமாம்' என்பார்கள் எமது முன்னோர் அதுபோல இருக்கிறதல்லவா இந்த நிலைமை? அரசாங்கத்தை நோக்கி எதிர்க்கட்சி விடுக்கும் எச்சரிக்கையில் பாதிக்கப்படப் போவது தமிழர்களே! அதாவது சிறிலங்காவின் பேரினவாத அரசியற் பின்னணியில் பெரும்பான்மையினக்கட்சிகள் 'அரசியல் நாடாத்துவதற்கு' போடுதடியாகப் போடப்படுபவர்கள் தமிழர்கள்தானா?

ஒரு முறை 83ம் ஆண்டுக்குப் போவோம். 1983 யூலை 23 திருநெல்வேலி தபாற் பெட்டிச்சந்திக் கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் சிறிலங்காவின் பாராளுமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. 25ம் திகதி கொழும்பின் தமிழர் பகுதிகள் பற்றியெரிந்தன. வெலிக்கடைச் சிறையில் இருந்த தமிழ் அரசியற்கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ் வணிகமையங்கள் தேடித்தேடி அழிக்கப்பட்டன. அமைதியாயிருந்த நுவரோலியாவுக்கு உலங்கு வானூர்தியில் சென்று இறங்கினார் காமினி திசநாயக்கா. நுவரேலியா பற்றியெரிந்தது. 'லங்கா ராணி' கப்பல் கொழும்பிலிருந்து அகதித் தமிழர்களை ஏற்றியபடி காங்கேசன்துறையை நோக்கி வந்தது. வடக்கு கிழக்குப்பகுதிகளுக்குத் தமிழ்மக்கள் கறுத்த உடையுடன் அகதிகளாக அடித்து விரட்டப்பட்டனர்.

அப்போது ஒரு செய்தி சிங்கள அரசியற் தலைமையால் தமிழ் மக்களுக்கு மிகத்தெளிவாக அழுத்திச் சொல்லப்பட்டது. வடக்குக் கிழக்குத்தான் உங்கள் தாயகம் என்பதே அது. அதாவது தமிழர்கள் எங்கு பரந்து வாழினும் இறுதித் தஞ்சமாக வடக்குக் கிழக்கே வந்து சேர வேண்டும் என்பதே இதன் உள்ளாந்தரமாகும். இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடுதலைக்காக எழுச்சியுடன் பல்லாயிரமாகப் புறப்பட்டது இக்கலவரத் தின் பின்னாகும். அண்மையில் சண்டே லீடர் ஆசிரியரும் மகாராஜா நிறுவனத்தின் ஊடக வலையமைப்பின் பிரதான பத்திரிகையாளருமான லசந்த விக்கிரமதுங்கவுக்கு கேணல் கருணா அவர்கள் வழங்கிய செவ்வியில் தன்னை இயக்கத்தில் இணைய உந்திய உடனடிக்காரணம் 83 யூலைக் கலவரத்தில் அடிவாங்கி கிழக்குப் பகுதிக்கு ஓடி வந்த தமிழர்களின் துன்பமே எனத் தெரிவித்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

இப்போது ஒரு தசாப்தங்களைக் கடந்து குணரத்தினவிடம் வருவோம். கறுப்பு யூலைக் கலவரம தொடக்கம் 20 வருடங்களாகப் பற்றியெரிந்த இலங்கைக்கு, ஒரு லட்சம் தமி ழர்கள் தம் உயிர்களை இழந்து, அர்ப்பணித்து நடத்திய போராட்த்தின் விளைவாக இன்று சமாதான தாகம் ஏற்பட்டு உள்ளது. இத்தாகத்தின் 'உண்மைத்தன்மையை' நாடிபிடித்துப் பார்த்த பின்னர் சர்வதேச சமூகம் யுத்தப் பாதிப்பிலிருந்து மீள்வதற்கென உதவிகளை வழங்குகிறது. இந்த உதவி கூட யுத்தத்தால் சின்னா பின்மாகிப் போன வடக்கு கிழக்குக்கன்றி 'முழுஇலங்கைக்குமே' என முத்திரையிடப்பட்டே வழங்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் குணவர்த்தனாவுக்கு இப்போது சன்னதமாடுவதற்கான தேவை என்ன? சமாதானக்காற்றின் ஒவ்வாமையும், அது நீடித்து வீசினால் தமது அரசியல் எதிர்காலத்தின் சூனியமுமே அவர்களை இவ்வாறு பேசத் தூண்டுகிறது.

இப்போது நாம் மிகக் கவனமாக இதை அணுக வேண்டும். ஏனெனில் 83ம் ஆண்டு நாட்டில் பெருமளவுக்கு யுத்த அனர்த்தங்கள் இடம்பெற்றிராத தமிழர் தரப்பு படைவலுவற்றிருந்த வேளையில் நடந்த கறுப்பு யூலைக்கும், தற்போது சமவலுவுடன் பெரும் போரை நடாத்தி சிங்களப் படைகளின் போர் முனைப்பின் பின் கூர்முனையைத் தகர்த்தெறிந்து விட்டு தமிழர் தரப்பு சமாதானம் பேசிக் கொண்டிருக்கையில் இக்கூற்று வந்திருப்பது அறிவுடமையானதா?

எது எவ்வாறிருப்பினும், சிங்களப் பேரினவாதிகளுக்கு தமிழ் மக்களை நிம்மதியாக தலைநிமிர்ந்து வாழ அனுமதிப்பதென்பது முடியாத ஒரு காரியமே. இதனைத் தடுக்க அவர்கள் எதுவும் செய்வார்கள். எப்போதும் செய்வார்கள். அதற்குத் தலைமையேற்க பதவி வெறிபிடித்த அரசியற் தலைவர்கள் ஆயத்தமாகவே இருக்கிறார்கள்.

எனவே, இலங்கைத் தீவில் தமிழினம் உரிமையுடன் பாதுகாப்பாக வாழ வேண்டுமெனில் படை வலுவுடன் கூடிய ஒரு தன்னாட்சிப் பிரதேசம் அத்தியாவசியம் என்பதையே 2003 ஜனவரி 30ம் திகதி ஒலித்த குணவர்த்தனாவின் குரல் மீண்டுமொரு முறை உறைக்கும் படி சொல்லியிருக்கிறது. இதைத் தற்போது சொல்லியமைக்காக குணவர்த்தனாவுக்கு நாம் நன்றி சொல்லத்தான் வேண்டும். ஏனெனில் சமாதானக் கனவுகளில் மூழ்கி எம்மில் யாராவது யதார்த்தத்தை மறந்து விட்டாலும் அவர்களைத் தட்டியெழுப்பியுள்ளாரல்லவா குணவர்தனா?

**இப்போது நாம் மிகக் கவனமாக இதை அணுக வேண்டும். ஏனெனில் 83ம் ஆண்டு நாட்டில் பெருமளவுக்கு யுத்த அநர்த்தங்கள் இடம் பெற்றிராத தமிழர் தரப்பு படைவலுவற்றிருந்த வேளையில் நடந்த கறுப்பு யூலைக்கும், தற்போது சமவலுவுடன் பெரும் போரை நடாத்தி சிங்களப் படைகளின் போர் முனைப்பின் பின் கூர்முனை யைத் தகர்த்தெறிந்து விட்டு தமிழர் தரப்பு சமாதானம் பேசிக் கொண்டிருக்கையில் இக்கூற்று வந்திருப்பது அறிவுடமையானதா?**

# சொல்லியே தீரவேண்டும்



தனி மனிதர்களாயினும் சரி அல்லது பொது அமைப்புகளாயினும் சரி. பொதுவாக சமூக நலன்கருதி செய்கின்ற நல்ல கைங்கரியங்களை பாராட்டுதல் வேண்டும்.

பொதுவாக சமுதாயத்தில் எத்தனையோ தேவைகள் நிரம்பிப் போய் இருக்கின்றபோதிலும் அவற்றை எவரும் கவனிப்பதில்லை.

சில வேளைகளில் பொதுவேளைகளுக்கென ஒதுக்கப்படுகின்ற நிதிகள் கூட உரியமுறையில் பயன்படுத்தப் படுவதில்லை.

இவ்வாறு இருக்கும் போது ஆழியவளைப்பகுதியில் இயங்கி வருகின்ற தியாக தீபம் திலீபன் ஞாபகார்த்த நடமாடும் மருத்துவசேவையினர் மக்களிற்கு மருத்துவசேவையினை வழங்கவென ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சமூகத்தின் மருத்துவ தொண்டிற்கென இச்சங்கம் புரிந்துள்ள இந்த மகோன்னத சேவையினை கண்டிப்பாக பாராட்டியே ஆகவேண்டும். அத்தோடு இதனை சமூகத்தில் இயங்கி வருகின்ற பொது அமைப்புக்கள் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிச்சயமாக இவ் அம்புலன்ஸ் வண்டியை வழங்கிய ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச நிர்வாகத்தினை எல்லோரும் பாராட்டுதல் வேண்டுமல்லவா?

**கா.சுரேன்**

மறக்காம கடிதம் போடுங்கோ சுதான்ரி தன் எதிர்பார்ப்பையும் சொன்னா. முற்றத்தில் நின்ற கோப்பி மரத்தில் குரங்குகள் மூன்று வந்திருந்து கோப்பி மரக் கொப்புக்களை முறித்துக் கொட் டியது..

2மணி. நந்தாவும், விழியும் வந்திருந்தார்கள்.
"என்ன தயாராயிட்டீங்களே...?" "ம்..."
"இனியெப்ப திரும்பிவாறது."
கேட்டாள் விழி.
"அடுத்தவருசம் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டுவாரும்"
என்றா சுதான்ரி.
"ம்..இஞ்சையே வந்திருந்திடலாம் போலையிருக்கு சுதான்ரி, அங்கைபோனா பிள்ளையளும் நானும் நாலுசுவரைச் சுத்தித் தானே வாழ்க்கை".
"என்ன அண்ணையை மறந்திட்டீங்கள்"
என்றாள் மதுரா.
"அவர்தானே மதுரா ஒரே வேலை வேலையெண்டு, ஓடித்திரியிறார். பாவம் ஒரு நேரம் நிம்மதியா எங்களோடை இருக்கேலாத வேலை,"
என்ற எனக்கு
"பேசாம உங்களுக்கெண்டு கொஞ்சத்தை மிச்சம் பிடிச்சுக் கொண்டு இஞ்சை வாங்கோ நிம்மதியா இருக்கலாம்"
என்றாள் மதுரா.
"ம்...நாங்கள் கட்டையிலை போறவரைக்கும் எங்களிட்டைக் காசைமட்டும் எதிர்பார்க்கிறவை இருக்கினமெல்லே மதுரா. அவேன்ரை உண்டியலுகள் குறைஞ்சா எங்களை நிம்மதியா இருக்க விடுவினமே...?"
"ஓரளவுக்குத்தான் குடுக்கிறது. இனி உங்களுக்காக, உங்கடை பிள்ளையளுக்கெண்டு வாழுங்கோ... அவை குடுக்கக் குடுக்க வாங்கிக் கொண்டேயிருப்பினம். நான் கூட வெளிநாடெண்டா கனக்கத்தான் நினைச்சனான். ஆனா நீங்கள் வந்தப்பிறகுதான் விளங்கிச்சுது அங்கை நீங்கள் குளிருக்கை இருந்து . கஸ்ரப்படுகிறது."
முற்றத்தில் நின்ற தென்னைகளுக்கு நடுவே கதிரையைப் போட்டுக் கொண்டு நந்தாவும் விழியும் கூப்பிட்டார்கள். "இஞ்சை வாங்கோக்கா கதைப்பம்...".
"என்னக்கா சாப்பிடேல்லை"
கேட்டாள் மதுரா. ஓ...இன்று மதியம் நாம் சாப்பிடவில்லையல்லவா...! மறந்தே போய்விட்டது.
"பசிக்கேல்லை மதுரா"
"போங்கோ போய்ச்சாப் பிட்டிட்டு வாங்கோக்கா.. என்ன ஒழுங்கா ஜேர்மனுக்குப் போய்ச் சேர விருப்பமில்லையோ"
கடிந்தாள் நந்தா.
"போய்ச்சாப்பிடுவம்.."
என்று நான் முடிக்குமுன்னம் தட்டில் சோறும் , சுறாமீன் கறியும்; முசுட்டை வறையும், சொதியும் போட்டு வந்தாள் மதுரா. இண்டைக்கு மட்டும் தான் இந்த ஊர்ச்சாப்பாடு..ஏங்கிய மனசோடு சாப்பாட்டை வாங்குகிறேன். பாதியை ஒருவாறு சாப்பிட்டு முடித்து விட்டேன். மீதி உள்ளிறங்க மறுத்தது. நோற்றுவரையும் மதுராவின் சாப்பாட்டில் அமுதமல்லவா இருந்தது. இன்று வேதனையாயல்லவா இருக்கிறது. கடவுளே இந்த அமைதி நிரந்தர அமைதியாகாதா...? இவர்களுடனும், இந்த மண்ணுடனும் வாழ்ந்து இறந்திட வரம் தருவாயா...? தலையிடித்தால் கூட தண்ணிதர நாதியில்லாது... தவிக்கும் அந்தப் புலம் பெயர் வாழ்விலிருந்து விடுதலை கிடைக்க வழிதாராயா..?
"அன்ரி நீங்க போகவேண்டாம் என்ன... எங்களோடையிருங்கோ..."
அடிக்கடி சுரபிக்குட்டி சொல்லிக் கொண்டிருந்தாள். அன்ரிக்கு அங்கை ஒரு அண்ணாவும், அக்காவும் இருக்கினம் அவையளையும் கூட்டிக் கொண்டு கெதியிலை பிள்ளையிட்டை வருவனாம் என்ன சுரபிக்குட்டி... எனது சமாதானத்தை நம்பிவிட்டாளோ என்னவோ எப்ப வருவீங்கள் திரும்பிக் கேட்டாள்.

கெதியிலை... சொன்ன என்னைப் பார்த்துச் சிரித்த மதுராவின் கண்கள் கலங்கியிருந்தன.
வாசலில் வந்து நின்ற காரின் 'கோண்'சத்தம் எங்களை வாசலை நோக்க வைத்தது.
சரிகார் வந்திட்டுதக்கா வெளிக் கிடுங்கோ...
என்றாள் விழி.

# தாய்மடி வாசம் 13



"என்ன நாலுமணிக்கெல்லே வரச் சொன்னது மூண்டரைக்கே வந்திட்டார்"
கேட்ட நந்தாவிற்கு
"அதுதானே... என்றாள் விழி."
என்னை இந்த வன்னி மண்ணை விட்டு ராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுப்பி வைக்க வாகனமும் வந்தாச்சு. இனி நான் புறப்படவேண்டியதுதான் மிச்சம்.
ஆனையிறவை மீட்க 1991 புறப்பட்ட வேங்கையணியோடு போராளிக் கவிஞையான கப்டன் வானதி அந்த ஆனையிறவு உப்பளக்காற்றோடு கலந்து 9 ஆண்டுகள் கழித்து ஓயாத அலை மூன்று எழுந்தடித்த பேரலையில் வென்ற ஆனையிறவில் நின்று வந்த பெண்போராளிகள் உட்பட தமிழீழத்தின் பெண்படைப் பாளிகளின் கவிதைகளைத் தாங்கி வந்த கவிதைத் தொகுப்பான
"எழுதாத உன் கவிதை"
கவிதைத் தொகுப்பை தனது நாளேட்டின் உறையிட்டு என்னிடம் அந்தக் கவிதைத் தொகுப்பைத் தந்தாள் விழி. விழியின் நினைவாக விழியின் நாளேட்டின்

**சுதந்திரா**

உறை என்னுடன் கூடவரத் தயாராய் நின்றது. நந்தா! அவளது அமைதியான சிரிப்பும், அந்த ஆர்ப்பாட்டமில்லாத முகமும் என் ஆயுள் உள்ளவரையும் என் நினைவை விட்டகலாத நினைவோடு நந்தாவின் ஞாபகங்களைச் சுமந்து கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியில் வருகிறேன்.
கண்ணீர் முட்டிய விழிகளோடு மதுரா வாசலில் வந்து என்னை அணைத்துச் சொன்னாள் போய் கடிதம் போடுங்கோ. அடுத்த வருசம் பிள்ளை யளைக் கூட்டிக் கொண்டு வாங்கோ... சுரபிக் குட்டியும், ராகவனும் அமைதியாக நின்றார் கள்.'காறி'ன் 'கோண்'சத்தம் வெளியில் வாவென்றழைத்தது.
உடைந்துவிட நின்ற அழுகையைக் கட்டுப்படுத்திச் சிரிக்கிறேன். எனது பொருட்கள், சுதான்ரியின் பொருட்கள் எல்லா வற்றையும் நந்தாவும், விழியும் ஏற்றி விட்டனர்.
"சரிவெளிக்கிடலாமா...?"
கேட்ட சாரதிக்கு
"ஓம்"
என்றா சுதான்ரி. அந்தக்

கணங்களில் உயிர் துடித்த துடிப்பும், உள்ளத்தில் வலித்த வலியும் எந்தக் கணங்களாலும் நான் உணர்ந்திராதவை. என் கைகளைப்பற்றி நந்தாவும், விழியும் சொன்னார்கள். கவனமாய்ப் போய்வாங்கோ என்றார்கள். எங்களைச் சுமந்து கொண்டு கார் புறப்படுகிறது. திரும்பி அவர்களுக்கு கைகாட்டினா சுதான்ரி. என்னால் திரும்பி அவர்களையெல்லாம் பார்க்க முடியவில்லை. புதுக்குடியிருப்புத் தாண்டி, முல்லைத்தீவு நகருக்குள் போய் சிலநிமிடம் நின்று வேகமெடுக்கிறது கார்.
"பாருங்கோன்ரி வன்னிக்கு வரேக்கை தனி ஒருத்தியா வந்தனான். இப்ப எத்தினை சொந்தங்கள், அக்கா அக்காவெண்டு ஓடிவந்து என்னை அணைச்ச இந்தப் பிள்ளையள் இதுகளை எப்ப திரும்பிப் பாக்கப்போறன்...? "
"இண்டைக்குக் காலமை போய்ப்பாத்த அந்தப் பிள்ளையள் காலுகளைக், கையளையெண்டு அங்கங்களைக் குடுத்திட்டு இருக்குதுகள். இஞ்சை வந்திருந்தா இந்தப் பிள்ளையளுக்குச் சேவை செய்து கொண்டிருக்கலாம். ஏதோ நானும் செய்த நிறைவோடை இருக்கலாம்."
எனது வலிபுரிந்த சுதான்ரி சொன்னா



"கெதியிலை இஞ்சை வந்திரும். எவ்வளவு காலத்துக்கு தனியவே இருக்கப்போறீர். உம்மடை மனிசன் எவ்வளவு நாளைக்கு வேலைவேலையெண்டு ஓடித் திரியப் போறார். இஞ்சைவந் தீங்களெண்டா நிம்மதியாவும் இருக்கலாம் பிள்ளையளும் படிக்குங்கள்." "ஓமன்ரி" என்றேன்.
என் நினைவெல்லாம் வன்னியில் நான் சேர்த்த சொந்தங்களையெல்லாம் சுற்றியே வந்தது. 1992இல் அம்மாவை விட்டுப் பிரிந்து புலம்பெயர்ந்து போனபோது

கூடச் தாக்காத பிரிவின் வலி இன்று இந்த வன்னிமண்ணில் நின்ற இந்த ஐந்து நாட்களிலுமான உறவுகளின் ஸ்பரிசம், ஊருடன், உறவுடன் ஒன்றாயிருக்கும் இனிமையின் சுகத்தை சொல்லித் தந்த இந்த மண்ணில் வாழும் இந்த உறவுகளின் நினைவுகளிலேயே ஒன்றியிருந்த என்னைக் கேட்டான் அந்த காரின்சாரதி.
"பாட்டுப் போடட்டேயக்கா..."
"ம்..."
"இயக்கப்பாட்டிருந்தா போடுங்கோ..."
"இயக்கப்பாட்டுக் கசட் அறுந்து போட்டுது. சினிமாப்பாட்டு இருக்குப் போடவா...?"
"எதெண்டாலும் போடும் தம்பி யென்றா சுதான்ரி."
ஒரு சினிமாப் பாடல் எனதும், சுதான்ரியினதும் மௌனங்களுக்கு நடுவில் ஒலித்துக் கொண்டிருந்தது.
ஒட்டிசுட்டான் வீதிவழியே கார் போய்க் கொண்டிருந்தது. காடுகள் சில இடங்களில் அழிந்ததன் தடங்கள்.
"இந்த ரோட்டிலைதான் சங்கரண்ணைக்கு அடிச்சவங்கள். அண்டுகேட்ட வெடிச்சத்தமிருக் கெல்லெயம்மா பயங்கரச் சத்தம்" என்றான் கார்ச்சாரதி.
"ஓ..."
சங்கரென்ற ஆலமரத்தைச் சரித்த வீதியா இது...?

*யார் நினைத்தோம் - இதை*
*யார்தான் நினைத்தோம்*
*எங்கள் தளபதியே*
*கேணல் சங்கரண்ணா..!*
*எல்லாம் கனவு போல்...*
*இன்னமும் நம்பமுடியாமல்...*
*உங்களது வீரமரணம்*
*புலன்கள் எல்லாம்*
*பேயறைந்தாற்போல்...*
*நாங்கலெல்லாம்*
*திகைப்பிலிருந்து மீளாமல்...*
*யார் தான் நினைத்தோம்-இதை*
*யார் தான் நினைத்திருந்தோம்*
*எங்கள் திலீபன்*
*நினைவில்*
*இதயங்கள் அழுது நிற்க...*
*உங்களை இழப்போம் என்று*
*யார் தான் நினைத்திருந்தோம்....!*
*சட்டெனத் தெறித்த*
*மின்னல்க் கீற்றாய்*
*உங்களைச் - சாவு*
*காவு கொண்டதோ...?*
*என் கண்களில்*
*நதியொன்று...*
*இன்னமும் என்இமை நனைய-என் இதயம்*
*வலிக்கிறது*
*எப்படி ஏற்றுக்கொள்ள...?*
*நீங்கள் நிரந்தரமாய்*
*உறங்கிவிட்டீர்கள் என்று*
*எப்படியண்ணா...!*
*மேல்நாட்டுப் படிப்பும்*
*தொழில் வாய்ப்பும்*
*சுகமான சொகுசு வாழ்வு*
*வந்தமைந்தும்*
*அனைத்தையும் விட்டெறிந்து*
*தாய் மண் காக்க்*
*தாயகம் திரும்பி வந்த தணலே...!*
*இருபது ஆண்டுகள்*
*எங்களின் இனிய வாழ்வின்*
*தாகம் சுமந்த சூரியனே...!*
*சங்கரண்ணா...*
*எப்படி ஏற்றுக் கொள்ள...?*
*நீங்கள் நிரந்தரமாய்*
*உறங்கி விட்டீர்கள் என்று*
*எப்படியண்ணா..!*
*இனிவரும் புரட்டாதி*
*இருபத்தாறுகள்*
*இன்னொரு சோகத்தையும்*
*எழுதிவரும் - அது*
*எங்கள் தளபதியை*
*நாங்கள் இழந்ததையும்*
*அழுது சொல்லும்..*
*எப்படியண்ணா...*
*ஏற்றுக் கொள்ள...?*
*09.26.1987 அன்று நான்*
*கேட்டழுதேன்*
*'இந்தப் பொழுது ஏன் விடிந்தது...'*
*இன்றும் அதைத்தான்*
*கேட்கிறேன்*
*'இந்தப் பொழுது ஏன்தான் விடிந்தது...'*
*இன்னமும் என் இமை நனைய-என்*
*இதயம் வலிக்கிறது.*

"விடியப்போனா போகேலாதேயன்ரி?"

தொடரும்....




# அவன் மறக்கவில்லை

கருமணி

காலங்காலமாக கடற் காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்கும் அந்தக்கிராமமும், கடல் நீருடன் பின்னிப்பிணைந்து வாழும் அந்த மக்களும் கடலையே நம்பி வாழ்கிறார்கள். அந்தக் கிராமத்தை அழகுபடுத்தும் பனைமரங்கள் கடற்காற்றுடன் குசுகுசுத்துக் கொண்டிருக்கும் கடலலைகள் அந்த மண்ணை முத்தமிடப் போட்டி போட்டு ஓடிவரும். மாலையில் மைனாக்களின் கலகலப்பும் இனிமையாக இருக்கும். காலையில் கடல்மட்டத்திலிருந்து சிரிக்கும் சூரியனின் முதல் முத்தம் அந்தக் கிராமத்திற்குத் தான். அலையோடு அலையாக வந்து கரையேறும் வெள்ளை நண்டுகள் மணலை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

இரவில் நட்சத்திரங்களின் வழிகாட்டலில் உறுமீனுக்காய் காத்துக்கொண்டிருக்கும் கொக்குப் போல் அல்ல சிறு மீன் பிடிக்கும் படகுகள் வெய்யிலில்காயும். கரையில் விடுபட்டுக்கிடக்கும் சூடைகளைப் பொறுக்க பஞ்சமிக் காகங்கள் வட்டமிட்டுத் திரியும்.

பாட்டியின் முற்றத்தில் பெரிய ஆலமரமொன்று பாட்டியின் மனம் போல கிளைகளைப் பரப்பி நிழல் கொடுத்துக் கொண்டிந்தது. வெயில் காலத்தில் அந்த மரத் தடியில் பெரிய கூட்டமே கூடியிருக்கும். பக்கத்து வீட்டுத் தாத்தா கூடக் கடற் காற்றை உள்வாங்கிக் கொண்டு பாயில்லாமல் படுத்துறங்குவார். அப்பாவின் வீச்சுவலை ஒரு கிளையில் தொங்கவிடப் பட்டிருக்கும். நாளைய இந்தக் கடலின் சிட்டுக்கள் ஆலம்விழுதில் ஊஞ்சல் கட்டி அலையின் தாலாட்டுப் பாட்டுடன் ஆடிக்கொண்டிருப்பார்கள்.

பளிச்சிடும் மேனியுடன் சிறார்கள் அலையுடன் வந்து கரையேறும் நண்டுகளைப் பிடித்து விளையாடுவார்கள். எனக்கு அலையென்றால் சரியான பயம். ஆனால், சம்மாட்டி ஐயாவின் மகன் வாசன் நான் கத்தினாலும் விடான். என்னைப்பிடிச்சு அலைக்குள்ள தூக்கி எறிவான். அப்பாவும் பார்த்துக் கொண்டுதான் நிற்பார். ஒன்றும் சொல்லவே மாட்டார். பிறகு, எல்லாம் பழகிப் போட்டுது. அப்பா இரவில தொழிலுக்குப் போவார். நல்ல மீன் பட்டால் விடிய நேரம் சென்று தான் வருவார். அப்பா பகலில போனால் ஒரு மாதிரி அம்மாவை பேய்க் காட்டிட்டு நானும் போயிடுவன். கரையில நண்டு பிடிக்கிற தெண்டால் எனக்கு நல்ல விருப்பம். கன பெடியள் நண்டு பிடிக்க வருவாங்கள். அவங்கள் அலைக் குள்ளால எல்லாம் இறங்கி ஓடுவாங்கள். பெரிய அலை வரேக் குள்ள சுழியோடுவாங்கள். நான் கரையில என்னைத் தேடிவாற நண்டுகளைப் பிடிப்பன். அவங்கள் என்னை நக்கலடிப்பாங்கள். ஒரு நாள் நானும் அவங்களோட சேர்ந்து இறங்கிட்டன். நண்டுகள் கூட நக்கலடிப்பது போல அலையுடன் வந்து கால்களைத் தொட்டுச் செல்லும்.

நண்டுகளைப் பார்த்துக் கொண்டு நிக்க பெரிய அலைவந்து காற்சட்டையை நனைச்சுப் போடும். அந்த அலைகள் தான் நண்டுகளையும் கொண்டு வந்து கரையேற்றும். நான் பிடிக்க ஓடிப் போவன். நண்டுகள் அலைப் போர்வைக்குள்ள தங்களை மறைத்துக் கொள்ளும். அந்த அலைக்கும் நண்டுக்குமுள்ள உறவு என்னைப் பொறாமை கொள்ளச் செய்யும். ஆனாலும், நான் அலையை வெறுக்கவில்லை.



பாட்டியிடம் கதை கேட்கிறதெண்டா எனக்கு நல்ல விருப்பம். கடலைப்பற்றியெல்லாம் நல்லாச் சொல்லுவா. பொக்கை வாயால ரசிச்சு ரசிச்சுச் சொல்லுவா. கேட்டுக் கொண்டே இருப்பன். கடல் கொந்தளிக்குமாம். ஒரு தரம் கடல் கொந்தளிச்சு பாட்டியின்ர ஆலமரத் தடிக்கு அலை வந்திட்டுதாம். இந்த மணல் எல்லாம் அலைதான் கொண்டு வந்து குவிச்சுதாம். "ஏன் பாட்டி இந்த ஆல மரத்திற்கா உங்களுக்கா வயசு கூட" பாட்டி தன் பொக்கை வாயால் பெரிதாகச் சிரிப்பா. பிறகு அமைதியாகக் கொஞ்ச நேரம் யோசிப்பா.

"இல்ல மோன, இது என்ர அம்மம்மாட காலத்தில இருந்தே இருக்குது"

பாட்டி அந்த ஆலமரத்தின் மீது வைத்திருந்த பற்றும், பாசமும் அவாவின் தள தளத்த குரலில் இருந்தே புரியும். மெல்லிய காற்றில் ஆலம் இலைகள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒலியெழுப்பும். எனக்குப் பயம் தான் வரும். இரவு வந்தா நான் அந்த மரத்திற்குக் கிட்டவும் போகமாட்டன்.

அம்மா முற்றத்தில படுத்துறங்குவா. பாட்டியின்ர விளக்கு மின்னிக் கொண்டிருக்கும். வாய் அசைந்துகொண்டேயிருக்கும். கண்கள் தென்னம் ஓலைகளை ஊடறுத்து நட்சத்திரங்களைத் தேடிக்கொண்டிருக்கும் அன்று இரவு எனக்கு நித்திரையே வராது. அந்த அலைகளும், பாட்டி சொன்ன கதைகளுமே மனதில் ஊசலாடும். எனக்கு எப்ப விடியுமென்றிருக்கும். சேவலின் விடியல் அறிவிப்பை எதிர்பார்த்துக்கொண்டிருப்பன்.

சூரியனின் பொன்னிறக்கதிர்கள் கிடுகு வீட்டை ஊடறுத்து நெற்றியில் முற்றுப்புள்ளி வைக்கும். வீட்டில இருந்து பக்கத்தில தான் கடல். ஒரு மூச்சில போய்ச் சேர்ந்திடுவன். பாட்டி கூப்பிடுறது காதில் கேட்கும். அந்தக் குரல் என்னை நிறுத்தி விடாது. மணலும் என்ர விருப்பத்திற்கு கால்களை எடுத்து வைக்க விடாது. விழுந்து விழுந்து நான் ஓடுவன். அந்த மணலில விழுந்து எழும்புவதே தனிச்சுகம். நான் தான் முன்னுக்கு வந்திட்டன். வந்திட்டன் என்று நினைக்கக் கவலையாக இருக்கும். தூரத்தில பார்த்தா அவங்கள் எனக்கு முன்னுக்கு வந்து சிப்பி பொறுக்கிக் கொண்டிருப்பாங்கள். சிலர் ஏரல் கிண்டுவினம். அவர்களைக் கண்டபிறகுதான் என் மனதில் மகிழ்ச்சியுணர்வு மெலிதாய் இழையோடும்.

வாசன் தான் எங்களவிடப் பெரிய பெடியன். அவன் தான் ஓடியும், அலைக்குள்ள இறங்கியும் நிறையச் சிப்பிபொறுக்குவான். நான் அவனிட்ட கேட்டு வாங்கிப் போடுவன். பிறகென்ன? அவங்களோட சேர்ந்து ஏரல் கிண்டுவன். எல்லாருமாச் சேர்ந்து கிண்டி சுட்டடிப்பம். கிண்டக் கிண்ட ஏரல் மண்ணுக்குள்ள ஓடி மறையுங்கள் நான் என்னை மறந்து கிண்டிக் கொண்டிருப்பன். பெரிய அலை வந்து என்ர காற்சட்டையைக் கழட்டிப்போடும். நான் எட்டிப் பிடிச்சுப் போடுவன். அப்ப தான் ஞாபகம் வரும். காற்சட்டைக்கு ஊசி குத்தலையென்று. பாட்டி அதுக்குத்தான் கூப்பிட்டிருப்பா. பாட்டிதான் என்ர காற்சட்டைக்கு ஊசிகுத்தி விடுறவா. பாட்டி நடுங்கி நடுங்கிக் குத்த நேரம் போடும் நான் பறிச்சுக்கொண்டு ஓடிடுவன்.

அப்பா தொழிலுக்குப் போனா நானும், அம்மாவும் கரையில போய் நிப்பம். அப்பா கட்டுமரம் தள்ளுவார். அப்பாவின் கைப்புயங்கள் ஏறி இறங்கும். நான் என்ர கையையும் மடிச்சுப்பாப்பன். அம்மா பாத்திட்டு நக்கலாச் சிரிப்பா. அப்பாவின்ர உள்ளங்கையைப் பிடிச்சுப் பார்த்திருக்கிறன்: மரம் போல இருக்கும்.

"துடுப்புப் பிடிச்சுத்தாண்டா அப்பாவின்ர கை மரம் மாதிரிக் கிடக்கு"

அம்மா சொல்லுவா, நான் நினைப்பன், அம்மா என்னை பயமுறுத்திறதுக்குத்தான் சொல்லுறா என்று. அப்பா கஸ்ரப்படுறதப் பாட்டிக்குச் சொன்னால், பாட்டி, அன்று தொட்டு இன்று வரை அப்பாவின்ர கதை சொல்லுவா.

"அவன் சின்ன வயதிலேயே தண்டு வலிச்சவன்ரா, அவனை வளர்த்துவிட்டதும் இந்தக் கடல் தான்ரா ஆழ்கடலில போய்ச் சுறா பிடிச்சவன் இப்ப எவனோ போட்ட மீன்பிடித் தடையால கரையில திரிஞ்சு சூடை பிடிக்க வேண்டி வந்துட்டுது. ம்..." வானத்தைப் பார்த்துக் கை ரெண்டையும் காட்டித்தான் கதையை முடிப்பா. அது பாட்டியின் வழக்கம்.

> ''அவன் சின்ன வயதிலேயே தண்டு வலிச்சவன்ரா, அவனை வளர்த்துவிட்டதும் இந்தக் கடல் தான்ரா ஆழ்கடலில போய்ச் சுறா பிடிச்சவன் இப்ப எவனோ போட்ட மீன்பிடித் தடையால கரையிலதிரிஞ்சு சூடை பிடிக்க வேண்டி வந்துட்டுது. ம்...'' வானத்தைப் பார்த்துக் கை ரெண்டையும் காட்டித்தான் கதையை முடிப்பா. அது பாட்டியின் வழக்கம்.

அப்பா கடலில மரத்தை இறக்கும் போது தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டுதான் இறங்குவார். அலையைத் தாண்டி மரத்தைக் கொண்டு போறதுக்கு அப்பா சரியாக் கஸ்ரப்படுவார். நானும், அம்மாவும் அப்பாவுக்கு உதவியாக மரத்தைத் தள்ளுவம். அலையுடன் போராடி இறுதியில் அப்பாதான் ஜெயிப்பார்.கட்டு மரம் அலையுடன் தாவிச்செல்லும். நான் அப்பாவின் மரத்தைத் தூக்கித் தூக்கிப் போடும் அலைகளைப் பார்த்துக்கொண்டிருப்பன். அம்மாவின் பெரிய கொண்டைக்குள் மாட்டிக் கொள்ளாத முடிகள் கண்களை மறைக்கும் போதெல்லாம், ஒதுக்கிவிட்டு அப்பாவையே பார்த்துக்கொண்டு நிப்பா.

அலையடித்துப் படிந்து போய்க்கிடக்கும் மணலில் நடக்குறதெண்டால் எனக்கு நல்ல விருப்பு. மெல்லிய காற்று என் உடம்பில் படும் போதெல்லாம் ஜில்லென்றிருக்கும்: ஒவ்வொருநாளும் புலரும் பொழுதில் எனக்கு ரம்மியமான பொழுது போக்கு.

அன்றும் கடலை நோக்கி ஓடுறன். என் கால்கள் பின்னப் படுகின்றன. ஆனால், விழவில்லை. காற்சட்டைக்கு ஊசி குத்தியிருந்ததால் இரண்டு கைகளையும் வீசி ஓடுகிறேன்.சூரியன் கடல் மட்டத்திலிருந்து கண் சிமிட்டிக்கொண்டிருக்கிறான். கடலை நெருங்கிவிட்டேன். அங்கும் இங்கும் பார்த்த வண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறேன். படர்ந்து கிடந்த கடலைத் தவிர என் கண்களில் எதுவுமே தெரியவில்லை.ஏமாற்றம் அடைந்து என் கால்கள் சோர்கின்றன. வழமையாக வேளைக்கு வந்து சிப்பி பொறுக்கும் வாசனைக் கூடக்காணவில்லை. தனிமை என்னை வாட்டியது. தொலைந்ததைத் தேடுவது போல் என் விழிகள் சுழன்று கொண்டிருந்தன. அலைகள் ஆறுதல் சொல்வது போல் மாறி மாறி கால்களை வருடிக் கொண்டிருந்தன. கடற்காற்றுத் தலையைத் தடவி ஏதோ சொல்ல முற்படுகிறது. சூரியனின் கதிர் வீச்செல்லை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மனதிற்குள் இருந்து தனிமையுணர்வு மெலிதாய் அகல்கிறது. என் கண்கள் அலைகளையே வெறித்துக் கொண்டிருந்தன. அலைகளின் தவிப்பு எனக்குப் புரியவில்லை. மகிழ்ச்சியா....? சோகமா...?

அலைக்குள் சிக்குண்டு மீளமுடியாமல் ஏதோ தவித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. என் கால்களும், விழிகளும் அதையே குறிவைத்தபடி நகர்கின்றன. அருகில் போய்ப் பார்க்கிறேன். காணவில்லை, அதை மீண்டும் அலை மறைத்து விட்டது. என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை. தெரிவதும் மறைவதுமாகக் கரைக்கு வருவதற்கு அலையுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. வாசன் நின்றிருந்தால் இந்த நேரம் அலைக்குள்ள இறங்கி எடுத்திருப்பான். நான் முழங்கால் மட்ட நீருக்குள் நின்று அதைப் பார்ப்பதற்கு ஏங்கிக் கொண்டிருக்கிறன். அலைகள் என்னைத் திட்டம் போட்டு ஏமாற்றுவது போல் கரைக்கு விடாமல் சுருட்டி சுருட்டி மறைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக்கணம் பாட்டி சொன்ன கதைகளை மீட்டுப் பார்க்கிறேன். ஆம்பல் மிதந்து வருமென்று சொல்லுவா. அது சரியான விலையாம். ஆம்பல் மிதந்து வந்திருந்தால் சந்தோசப் பட்டிருப்பன். ஆனால், மிதந்து வந்தது சூட்டுக்காயங்களுடன்...

கலங்கிய விழிகளால் திரண்டு வரும் அலையைப் பார்க்கின்றேன். அன்றும், இன்றும் அலைகள் மாறவில்லை. கரையைத் தொட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. நண்டுகளும் மணலை ஆட்சிசெய்து கொண்டுதானிருக்கின்றன. காலம் மாறிட்டுது. நான் மாறிட்டன்.

"இந்தக் கடல் எங்கட மூதாதையர் கட்டுமரம் செலுத்திய கடல் மச்சான். நாங்கள் தான் பாதுகாக்க வேண்டும். இந்தக் கடலுக்குச் சொந்தக்காரர் நாங்கள் தான் மச்சான்" சிறியின் மனக்குமுறலைப் புரிந்து கொண்டவன்,அவனை தழுவுகிறான். படகுகள் செல்வதற்கு தயாராகின்றன. புலிக்கொடி தாங்கிய சிறியின்படகும் அலைகளைக் கிழித்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் செல்கிறது. அவனது கண்ணீர் அன்று உப்பு நீருடன் சங்கமித்ததை அவன் இன்னும் மறக்கவில்லை. ✦



# நூல்நோக்கு

நூல் : தரிசனம் சிறுகதைத்தொகுதி
எழுதியவர்: சிவஞானசுந்தரம் (நந்தி)
வெளியீடு : குமரன் புத்தக நிலையம் கொழும்பு.



ஈழத்து இலக்கிய உலகுக்கு 'நந்தி' அவர்களின் பங்களிப்பு அதிகமானது. மிகவும் ஆழமானது. நாற்பது வருடங்களுக்கும் மேலாக எழுதிக் கொண்டிருப்பவர். நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், சிறுவர் நூல்கள், ஆத்மீகம், மருத்துவம் என்று பலதுறைகளில் இவரது எழுத்துப்பணி விரிந்திருக்கிறது.

அவரின் அண்மைக்கால வெளியீடு "தரிசனம்" சிறுகதைத் தொகுதி. எப்போதுமே நந்தி அவர்களின் பார்வை சமூகத்தின் மீது கூர்மையானதாகவே இருந்திருக்கிறது. அவரின் சமீபகால சிறுகதைகள் வரை அதன் வெளிப்பாடுகளை காணக் கூடியதாக இருக்கிறது. சமூக விழிப்புணர்வை தேடும் ஒரு படைப்பாளியாகவே அவர் தன்னை அடையாளப் படுத்துகிறார். இதற்கு அவரின் கூர்ந்த அவதானிப்பும் பரந்த அனுபவமும் சமூக நேசிப்பும் காரணிகளாகின்றன.

வித்தியாசமானதாகவும் மிகச் சிறப்பானதாகவும் தரிசனம் அட்டைப்படம் அமைந்திருக்கிறது. மிகக் கவனமாகத் தெரிவு செய்யப் பட்ட ஓவிய அமைப்பு. இதில் ஒரு கதை தவிர மற்றைய பதினொரு கதைகளும் 1995ம் ஆண்டுக்குப் பின்னர் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் இருக்கும் ஒவ்வொரு கதைகளும் சமகால நிகழ்வுகளின் தரிசனமாகவே இருக்கின்றன. சமூகத்தைப் பார்க்கும் பார்வையும், மனிதர்களின் அவலங்களை உள்வாங்கி எழுதப்பட்ட நடையும் அதற்காக கையாண்ட மொழி வளமும் கதைகளுக்கு சிறப்புச் சேர்ப்பவை. கதை சொல்லும் விதத்தில் இழையோடிக் காணப் படும் கிண்டலும் நகைச்சுவையும் வாசிப்பில் ரசனையைத் தோற்று விக்கிறது. மனித மனங்களின் விசித்திரங்களின் வெளிப்பாடுகளை இயல்பாக சொல்லும் உத்தி இது.

அந்த வகையில் 'கொடுமைக்கு அப்பால்'

'உணர்ச்சிகள் உணர்ச்சிகள்' அருமையான கதைகள் எமது சூழலின் அன்றாட நிகழ்வுகளையும் மனிதர்களின் சின்னத்தனமான செயல்களையும் இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்.




எமது சமகால வாழ்வு பற்றி மறுபடி அசை போட வைத்த கதை. மீண்டும் கேள்விகள் உருவாகின்றன. படித்து முடித்த பின்பும் கதையிலிருந்து விடுபட முடியாத உணர்வை நெஞ்சுக்குள் ஏற்படுத்திய கதை. மனித உயிர்களின் பெறுமதி பற்றிய நெருடலைத் தோற்றுவிக்கும் இயல்பான கதை.

ஒரு பெண்ணின் மன உறுதி பற்றிப் பேசும் "இருட்டிலிருந்து" கண்பார்வையற்ற ஒருவனின் நல்ல பண்புகளையும் அவனது தெளிவையும் பற்றிப் பேசும் "தரிசனம்", ஒரு ஏழைப் பெண்ணின் நம்பிக்கை பற்றிச் சொல்லும் "மருந்துக்கு அப்பால்", சாதி சமயத்தைப் பார்க்காமல் சங்கீதத்தையும் மனிதத்தையும் நேசிக்கும் மனம் பற்றிப் பேசும் "காலங்கள் ராகங்கள்", சமகால அரசியல் நிகழ்வுகளின் தாக்கம் பற்றிச் சொல்லும் 'அர்த்தங்கள்', வித்தியாசமான கதை அமைப்பில் இடம் பெற்ற "அம்மா அம்மே...", மனைவியைத் தேடி அலையும் ஒரு கணவனின் தவிப்பைச் சொல்லும் "யானையின் காலடியில்...." சந்தர்ப்பம் சூழ்நிலைக்கு அப்பால் உள்ள யதார்த்தத்தைச் சொல்லும் "இராசையாவின் தங்கை", தவறான வழிபோக முயலும் இளைஞன் மனம் திருந்துவது பற்றிச் சொல்லும் "உபதேசம்" என்று அனைத்துக் கதைகளுமே ஏதோ ஒரு வகையில் நம் வாழ்வு பற்றிப் பேசுபவையாகவே இருக்கின்றன.

படிக்கும் ஆர்வத்தை வாசகர்களிடையே தோற்றுவிக்கும் விதமாக எழுத்து நடையே தொகுப்பு முழுவதும் ஆட்சி செலுத்துகிறது. இவருடைய எழுத்து நடையும் கதை சொல்லும் விதமும் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமுடையது. அதனால் தான் நாற்பது வருடங்களுக்கும் மேலாக இவரால் தொடர்ந்து எழுத முடிகிறது. சமகால அரசியல் நிகழ்வுகளையும் மனிதரின் துன்பங்களையும் பதிவு செய்ததன் மூலம் ஈழத்து இலக்கிய உலகில் "தரிசனம்" கொஞ்சம் அழுத்தமாகவே தன்னைப் பதிவு செய்து கொள்கிறது.

-தாமரைச்செல்வி-



# மாறும் நிலவு... மாறாத நான்... நீ...

*நானும் நீயும்*
*பேசிக்கொள்ள விசயங்கள்*
*இன்னும் ஏராளம் இருக்கின்றன.*

*நிலவு வீணே உருகி*
*ஒழுகிப் பரவுகிறது,*
*யாராகினும் மீளவும்,அனேகமாய்*
*நிலவொன்றைச் செய்து*
*அந்தரத்தில் சொருகி விடலாம்.*

*என்றாலும்,*
*இன்று போன்று இராதல்லவா?*
*அதுவும் கரைந்து மீண்டும்,*
*ஒன்று வரலாம், எனினும்*
*அது இன்றையதையோ பிந்தியதையோ*
*போலவே இருக்க முடியாதென்று*
*நீயும் உணர்கிறாயா?*

*நீயும் நானுமாய்*
*இருந்து, பலதும் பத்தும்*
*பேச எவ்வளவோ இருக்கின்றன.*

*அடுத்த நிலவு நாளுக்கும்,*
*அடுத்தடுத்த நாட்களுக்கும்*
*பஞ்சமில்லாத விசயத் தொடர்ச்சி*
*நீளத்தானே செய்யும்.*

*இன்றைய நிலவுக்காய்,*
*இன்று தான் பேச வேண்டும்.*

## சாலையோரக்கதைகள் -03

# வாய்ச்சொல் வீரர்கள்

பிற்பகல் மூன்று மணிக்கு இலக்கியக் கூட்டம் ஆரம்பமாக இருந்தது.

அவன் தனது கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் இரண்டு முப்பது. இன்னமும் அரைமணித்தியாலத்துக்குள் இரண்டு மைல் தூரம் செல்ல வேண்டியிருப்பதை நினைத்து, தனது மிதிவண்டியின் வேகத்தை அதிகரித்தான்.

சாலை சீரற்றதாக இருந்தது. அவனால் வேகமாக மிதிவண்டியைச் செலுத்த முடியவில்லை. போதாக்குறைக்கு அதிவேகமாகச் செல்லும் கனரக வாகனங்கள் மூலம் எழும் செம்புழுதிப் படலத்தூடாக மூச்சையடைக்கி ஓடுவது மிகவும் கஷ்டமாக இருந்தது.

''ஹலோ... எங்கை கூட்டத்துக்கா?''

அவன் திரும்பிப் பார்த்தான்.

தனக்குப்பின்னால், தான் செல்ல வேண்டிய கூட்டத்துக்கு ஒருவர் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

பேச்சுத்துணைக்கு ஆள் கிடைத்த புழுகத்தில் இருவரும் இலக்கியம் சம்பந்தமாக உரையாடியபடி சென்றார்கள். இவர்கள் சென்று கொண்டிருக்கையில்... சாலை வழியில் ஒரு நடுத்தர வயதுப் பெண் விறகுச் சுள்ளிகளைக் கட்டாகக் கட்டி விட்டு, அதைத் தூக்கித் தலையில் வைக்க ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

''தம்பி இந்த விறகுக் கட்டையை ஒருக்கா தூக்கி விடய்யா..''

திரும்பிப் பார்த்த அவன், திடீரென தன் மிதிவண்டியின் வேகத்தைக் குறைத்து... நிறுத்தினான். அவளருகில் வந்தான். விறகுக் கட்டையைத் தூக்கி சமநிலையாக அவளது தலையில் வைத்து விட்டு, மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

''என்ன இருந்தாலும் நீங்கள் இப்படி நடந்து கொண்டது நல்லாயில்லை.''

சகநபர் கூறிய வார்த்தைகள் அவனுக்குத் திகைப்பை உண்டு பண்ணின. அவன், அவரைத் திரும்பிப் பார்த்தான்.

''நீங்கள் ஒரு எழுத்தாளராக கவிஞராக இருந்து கொண்டு, உங்கட தகுதியை மீறி இப்படி நடுத்தெருவில கேவலம் கெட்டதுகளுக்கெல்லாம் உதவி செய்யுறது எனக்கு 'டிசென்டா'த்



தெரியேல்லை.

அவனுக்கு மேலும் அதிர்ச்சியை உண்டு பண்ணின அந்த வார்த்தைகள்.

யார் கேவலம் கெட்டவர்கள்?

"சொந்தச் சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்காரடி கிளியே...." என்று பாரதியார் பாடியது இவரைப் போன்றவர்களுக்காகத் தானோ..?

அவன் சிந்தித்துக் கொண்டே... சில விநாடிகளின்பின் கேட்டான்.

"இன்றைக்கு கூட்டத்தில் நீங்கள் எதைப்பற்றிப் பேசப் போவதாகச் சொன்னீர்கள்..?"

அவன் அப்படிக் கேட்டதும், அந்த நபர் பெருமிதத்தோடு அவனைப் பார்த்துச் சொன்னார்.

"பாரதியார் சிந்தனைகள்...."

அலெக்ஸ் பரந்தாமன்



# பொழுதின் விரையம்

*நாய் பறக்கிறது*
*விரைவு விரைவாய் கால்களால்*
*புழுதி வலித்து,*
*அவசரமாய்.*

*ஆறுதலாய்ப் போக*
*அவகாசமில்லாத அதி*
*அவசரமோ?*

*"நாய்க்கு வேலையுமில்லை,*
*நடக்க நேரமுமில்லை"*
*பாட்டியின் புறுபுறுப்பு*
*காதுகுடையும்,*
*எனது பொழுதுகளில்*
*அவசரம் எனக்காயும்*
*பரிகாசம் அவளுக்காயும்*
*இருப்பதில் புதினமில்லை.*

*நாய் பறக்கிறது,*
*சிரிப்பாய் வரலாம்,*
*எனினும்,*
*என்னைப் போல*
*ஏதும் அலுவல் அவசரப்படுத்தி*
*இயக்கலாமில்லையா?*

கை. சரவணன்

திறமை அற்ற தொழிலாளி, தன் கருவிச் சாதனங்களைக் குறை கூறுவான். - ஜார்ஜ் ஹெர்பெர்ட்.




## குட்டிக்கதை

# கஞ்சத்தனம் கூடாது...

ஒரு ஊரில் காளியண்ணன் என்ற விவசாயி இருந்தார். அவர் பணக்கார். ஆனால் மகா கஞ்சன், ஒரு முறை அவரது தானியக் கிடங்கிற்குள் ஒரு நல்லபாம்பு புகுந்து விட்டது. அதனால் அக கிட்ங்கிற்குள் செல்ல எல்லோருமே பயப்பட்டார்கள். வேலையாட்கள் போகப் பயப் படுவது கண்டு வேறு வழி இல்லாமல் காளியண்ணன் பாம்பாட்டி பரமனை அழைத்துவரச் சொன்னார்.

பரமன் வந்ததும் காளியண்ணன் "என் கிடங்கிலுள்ள பாம்பை பிடித்துக் கொண்டு போய் எங்கேயாவது விட்டுவிடு உனக்கு பணம் தருகிறேன்" என்றார். பரமனும் மகுடியை ஊதவே தானியக் கிடங்கிற்குள் போன பாம்பு வெளியே வந்தது. பரமனும் அதைப்பிடித்து ஒரு பேணிக்குள் போட்டு மூடிவிட்டு காளியண்ணனிடம் பணம் கேட்டான்.



அவர் ஒரு ரூபாயை எடுத்து பரமனிடம் நீட்டினார்.

பரமனோ "நான் ஒரு பாம்பைப் பிடிக்க வாங்குவது பத்து ரூபாய் அதைக் கொடுங்கள்" என்றான். காளியண்ணனோ "முடியாது. இஸ்ரமிருந்தால் இதை வாங்கிக் கொள். இல்லாவிட்டால் பேசாமல் போ!" என்றார் அலட்சியமாக.

அப்போது பரமன் "அப்படியா" என்று கூறித் தன் தகரப் பேணியைத் திறந்து தான்பிடித்த பாம்பைத் தூக்கி தானியக் கிடங்கிற்குள் எறிந்தான். இதைக் கண்ட காரியண்ணனோ "பரமா! பாம்பைப் பிடித்துக் கொண்டு போய் விடு. பத்து ரூபாய் கொடுத்து விடுகிறேன்" என்றார் அழாத குறையாக.

பரமனோ "இது நான் இரண்டாவது தடவை யாகப் பிடிப்பது. எனவே எனக்கு இருபது ரூபாய் தர வேண்டும்" என்றான் காளியண்ணனும் வேறு வழியில் லாமல் இருபது ரூபாய் கொடுத்தார். கஞ்சத்தனம் செய்தால் இப்படித் தான் பணங்கள் செலவாகின்றன. இனி கஞ்சத் தனமே செய்யமாட்டேன் என்று சிந்தித்தபடி கதிரையில் உட்கார்ந்தார்.

சு. கௌரீசன்,
மு/வித்தியானந்தக் கல்லூரி.

## வாரம் ஒரு குறள்



பணிதல் என்பது எல்லோராலும் மதிக்கப்படக்கூடியதொன்றே. ஆனால் சில வேளைகளில் பணிந்து போவதினால் இகழ்வடையவும் நேரிட்டு விடும். ஆகையால் எங்கே? எப்பொழுது? பணிய வேண்டும் என்பதையும், எங்கே? எப்பொழுது? பணியக் கூடாது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதனை வள்ளுவப் பெருந்தகை எப்படிச் சொல்லுகின்றார் என்றால், ஒருவன் உயர்ந்த பதவியும், பொருளும் உடைய காலத்தில் பணிந்து நடந்தால் அது புகழைத் தரும். வறுமையான போது, வசதியற்ற வேளை ஒருவன் பணிந்து நடந்தால் அது இகழ்வையே தரும். ஆகவே உயர்வு வேண்டுமாயின் தாழ்வுற்ற வேளையில் பணிந்து போகாமல் உயர்ந்து நின்று புகழ் பெற வேண்டும் என்கிறார் வள்ளுவர், அதற்கான குறளைப் பாருங்கள்.

**"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு."**

## என் அம்மா

*பத்து மாதம் என்னை*
*பத்திரமாய் தான் சுமந்து*
*நித்திரையை அவ மறந்து*
*சித்திரையில் பெற்றெடுத்து*
*பாலூட்டித் தாலாட்டி*
*சீராட்டிப் பாராட்டி*
*பள்ளிப் படிப்புடனே*
*பண்பான பழக்கத்தையும்*
*எள்ளி நகையாடாது*
*அள்ளி எமக்களிக்கும்*
*வெள்ளிச் சுரங்கம்*
*என் அம்மா*

சிஜாங்கா. ரவி
தரம் - 03,
சுவிஸ்

# எனது பழைய பாடசாலை

எனது பழைய பாடசாலையின் பெயர் கிளி/அக்கராயன் அ.த.க.பாடசாலை. இது கோணாவில் என்னும் அழகிய கிராமத்தில் அமைந்துள்ளது. இங்கு தரம் 1-11 வரையுள்ளது. இப் பாடசாலையில் குளிர்மை மிக்க மரங்கள் சோலையாக உள்ளது. என்னைத் தரம்-4ல் இருந்து தரம் 10வரை உயர்த்திய பெருமைமிக்க பாடசாலையும் இதுவே. நான் படித்த காலங்களிலிருந்து பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள் மதிப்பிற்குரிய திரு.S.திரவியம், திருமதி N.குகதாசன், திரு.S.சிறிதரன் இவ் ஆசிரியர்கள் எனது பாடசாலை வளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்கள்.

இங்கே உள்ள மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர். எனது பாடசாலை மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டத் தேசிய மட்டம் கூடச் சென்று சாதனை படைத்த பெருமை மிக்கப் பாடசாலை.

இங்கே உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், ஒருவரையும் என் பாடசாலை நினைவுடன் மறக்க முடியாது. எனது பாடசாலை மகா வித்தியாலயம் ஆகி, கல்லூரி ஆக எனது வாழ்த்துக்கள்.

செ. ஜீவிதா, தரம் - 11A
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

## தமிழீழம் பற்றிய சில தகவல்கள்

01) தமிழீழத்தில் உள்ள பெரிய மாவட்டம் எது?
அம்பாறை மாவட்டம்
02) தமிழீழத்தின் தலைநகரம் எது?
திருகோணமலை.
03) 2ம் ஈழப்போர் ஆரம்பமான ஆண்டு எது?
1990
04) விடுதலைப்புலிகள் முதல் உருவாக்கிய எறிகணை எது?
பசீலன் எறிகணை
05) தமிழீழத்தில் முதல் உருவாகிய பாடல் தொகுதி எது?
போர்க்கால மேகம்
06) லெப். கேணல் விக்டர் வீரச்சாவு அடைந்த மாவட்டம் எது?
மன்னார் மாவட்டம்.

தெ. மோகனதாசன்
கிளி/புன்னைநீராவி வித்தியாலயம்





ஒருவர்: எல்லாரும் எங்க ஓடுறீங்க?

தாதி: நம்ம டாக்டர் ஒப்பரேசன் செய்த நோயாளி தப்பிற்றாராம். அந்த அதிசயத்தைப் பாக்கத்தான் போறம்!

பெ.ஸ்ரீபன்
புதுக்குடியிருப்பு ம.வி

## கைவண்ணம்



எ.ராகவி
தரம் -6c
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

## குறுக்கெழுத்துப் போட்டி 09




**இடமிருந்து வலம்**

01. செய்கை மூலம் வெளிப்படுத்துதல்.
08. நேரம் காட்டும் கருவி.
13. அன்னசாலை குழம்பியுள்ளது.
22. நெற்றி.
25. தருப்பை குழம்பியுள்ளது.
31. பூநூற்சடங்கு.

**மேலிருந்து கீழ்**

02. தேவகுரு குழம்பியுள்ளது.
13. மதபோதனை ஒரு எழுத்தை இழந்து குழம்பியுள்ளது.
21.ஒன்பது தலைகீழாக உள்ளது.

குறுக்கெழுத்துப்போட்டி இல.7 பரிசுக்குரியவர்

வி.வராகினி
2ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

பாராட்டுக்குரியவர்கள்
இ.அனுசன்
கோபாலபுரம்,
திருகோணமலை.

செ.மஞ்சுளா,
தோணிக்கல்
வவுனியா.

குறுக்கெழுத்துப்போட்டி இல.7 இன் விடைகள்

இடமிருந்து வலம்
01.சங்கமுகம்
07.திதி
10.தும்பி
14.குங்குமம்
19.அக்கிரமம்
27.கிழவன்
31.புலம்

மேலிருந்து கீழ்
01.சதி
04.முதுகுரவர்
15.கிங்கிணி
19.அப்பு
29.இன்னல்

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.9
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

ஒரே தொழிலில் ஈடுபட்டிருக்கும் இருவர், ஒரு போதும் இசைவிணக்கம் காண்பதில்லை. - ஜான்கே.

# தமிழீழத்தின் ஆதார வேர்களைப் பாதுகாப்போம்

சுவிஸிலிருந்து ரகுபாலன்



உலகம் •தோன்றிய நாள் முதலாகவே கொல்லாமை என்ற உணர்வை மக்களிடையே தமிழ் மறையான திருக்குறள் பகவத்கீதை உட்பட சைவசமய பல அற நூல்கள் உணர்த்தியுள்ளன. ஒரு காலத்தில் அடர்ந்த வனமாக வளர்ந்த எமது தமிழீழப்பிரதேசம் தற்பொழுது அழிக் கப்பட்டு பாலைவனமாக மாறிக் கொண்டு வருகிறது. விவசாய காரணங்களுக்காகவும் சேனைப் பயிர்ச்செய்கை குடியேற்றத் திட்டங்களுக்காகவும் தமிழீழக்காடுகள் பாரிய அளவில் அழிக்கப்பட்டுள்ளன. வயிற்றுப் பாட்டுக்காக ஆதார வேர்களையே பறித்தெடுக்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது தமிழினம். வாழ்வா? சுற்றுப் புறச்சூழலா? என்ற கேள்வியே தமிழீழத்தைப் பொறுத்தவரை தற்போது எழுந்துள்ளது. எமது காடுகளை முட்டாள்த்தனமாக நாங்கள் அழிக்கவோ வெட்டவோ தலைப்படக் கூடாது. இது எங்களை நாமே அழிப்பதற்கு சமனாகும். மரமின்றிப் போனால் நம் இனம் இன்றிப்போகும் என்பது திடம். அந்நிய சிங்கள இராணுவப் படை எடுப்பினால் ஏராளம் பல மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. பல காடுகள் எரியூட்டப் பட்டன. அநியாயமாகத் திட்டமிடப்பட்டு சிங்கள அரசுகளால் தொடர்ந்து இலங்கை பூராகவும் சிங்கள மக்களுக்கு தேவையான மரத்தளபாடங்கள் விறகுகளுக்கு மற்றும் பல தேவைகளுக்கு தமிழீழக் காடுகளில் மரங்கள் வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. சிங்களப் பகுதிகளில் காணப்படும் காடுகளை வன உயிரினங்களை சிங்கள அரசுகள் தொடர்ந்து பல வன விலங்கு சரணாலயங்களை (Nationalpark) வனப்பாதுகாப்பகங்களை உருவாக்கி பாதுகாத்து வருகிறது. தமிழீழத்தில் இன்று வரை வனவிலங்கு சரணாலயங்களையோ பூங்காக்களையோ வனவிலங்குப் புகலரண்களையோ(Nationalpark) உருவாக்கவும் இல்லை. பாதுகாக்கவும் இல்லை இனியும் இதே நிலைதான் தொடர்ந்தும் சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்படும்.

தமிழர்தலைமை இது தொடர்பாக உடனடியாக சிந்தித்து செயலில் இறங்க வேண்டும். ஒரு நாட்டில் பூமியின் ஆதார மரங்கள் என்பது. அங்கு வாழும் பறவைகள், ஊர்வன, கடல் வாழ் உயிரினங்கள், மரங்கள், செடி கொடிகள், காடுகள், வன உயிரினங்கள் ஆகியவற்றினையும் உள்ளடக்கியனவாகும். உலகிலுள்ள மற்ற எல்லா உயிரினங்களின் வாழ்வை குலைக்கும் வல்லமை மனிதனுக்கு மட்டுமே உண்டு. பூமிஎல்லா உயிரினங்களையும் வடிவமைக்கின்ற மென்மையான தொடர்களாலான ஒரு சூழல் முறை என்பதனை தமிழர்களாகிய நாம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். ஒரு உயிரினம் அழிந்து போனால் அது ஆயிரக்கணக்கான உயிரினங்களின் இருப்பையும் கடைசியாக நமது மனிதனின் இருப்பையும் அச்சுறுத்தும் ஆகவே வன உயிரினங்களை தமிழீழத்தில் பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். சமூக விரோதிகளால் தமிழீழத்தில் வன உயிரினங்கள் இறைச்சி, பற்கள்,தந்தம், இறகு, உறுப்புக்கள் தோல்கள் போன்றவற்றிற்காக சட்டவிரோதமாக தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வருகின்றன. இதனை சம்பந்தப் பட்டவர்கள் உடனடியாக இரும்புக் கரம் கொண்டு தடுத்திடல் வேண்டும். தடை செய்யப்பட வேண்டும்.

தமிழீழத்தில் பல வனவிலங்கு பறவைகள் பாதுகாப்பு பிரதேசங்களை ஒதுக்கி அங்கு வன உயிரினங்கள் வேட்டையாடப்படுவதை முற்றாகத் தடை செய்ய வேண்டும். வனப்பாதுகாப்பு வலயங்களை சேவைக்கு அமர்த்தி பாதுகாக்க முன்வர வேண்டும். வன உயிரினங்கள் அழிந்த பிற்பாடு அதைப்பற்றி சிந்திப்பதில் பலனேதும் இல்லை. தமிழீழ வன உயிரினங்கள் மிக வேகமாக அழிந்து வருகிறது. இந்நிலை தொடர்ந்தால் சில ஆண்டுகளில் முற்றாக அழிந்துவிடும். இதனை தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயலில் உடன் இறங்க வேண்டும். காடுகள் நமது கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் வளர்த்த புண்ணிய ஸ்தலங்கள். இயற்கை தமிழர்களாகிய எங்களுக்கு கடவுள் ஆகும். ஆதியில் இயற்கை வழிபாடே இருந்தது. அதற்குத்தான் சைவக் கோயில்களில் இறைவனின் வாகனமாக உயிரினங்களையும் மரங்களையும் ஏற்படுத்தி போற்றி வழிபட்டு அர்ச்சித்து கௌரவித்து வருகின்றார்கள் தமிழர்கள். மனிதர்கள் சொந்தக் காரணங்களுக்காக தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு வாழ்ந்த மண்ணைவிட்டு வெளியேறி புலம் பெயர்ந்து வருகின்றார்கள். ஆனால் அங்கு வாழ்ந்த உயிரினங்கள் மரங்கள், செடி கொடிகள் அப்படிப் போகாமல் அங்கேயே வாழ்ந்து மடிகின்றமையினால் மனிதர்களை காட்டிலும் சிறந்தனவையே. மேலானவையே. ஆகவேநாம் எமது பிரதேசத்தின் காடுகளை வன உயிரினங்களைக் காப்பது. தமிழீழப்பிரசை ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். தமிழீழத்தின் ஆதாரவேர்கள் அழிக்கப்பட்டு வருவது பாரிய அழிவும் ஆபத்தும் ஆகும்.

இலங்கைத்தீவில் மூன்று வன விலங்கு புகலரண்கள் (Nationalpark) உண்டு. மூன்றும் சிறிலங்காவின் சிங்கள மக்கள் பெரும்பாண்மையாக வாழும் பகுதியிலே அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மிருகக் காட்சிச் சாலை தாவரவியல்ப் பூங்கா போன்ற இயற்கை சம்பந்தமான எல்லா விடயங்களையும் ஒரு தலைப்பட்சமாகசிங்கள மக்கள் பெரும்பாண்மையாக வாழும் பகுதியிலே தொடர்ந்து அமைத்து பாதுகாத்து வருகிறது. சிங்கள மக்களின் பொருளாதார வேலைவாய்ப்பு நன்மைகருதி தமிழீழத்தில் சற்று வெப்பம் கூடிய பகுதியாகும். அதற்கேற்ப சிறப்பான வறண்ட இயல்புக்குரிய தாவரங்கள் வளர்கின்றன. தமிழீழம் உலர்வலய உறல் ஈரலிப்பு வெப்ப வலயக் காடுகளைக் கொண்டது. அடர்ந்த காடுகள் பற்றைக்காடுகள் புல்வெளி காடுகளை உடையது. தமிழீழம் தமிழீழ தேசிய மரமாகிய பனை மரம் வறல் நிலைய வளரிக் குரிய இயல்பை உடையது.

தமிழீழத்தில் பல வன விலங்கு பறவைகள் சரணாலயங்களை புகழரண்களை, தேசிய விலங்கு சரணாலயங்களை ஏற்படுத்திப் பாதுகாக்க வேண்டும். அங்கு வேட்டையாடுதல் காடழிப்பு முற்றாகத் தடை செய்யப் பட்டு வனப்பாதுகாவலரை சேவைக்கு அமர்த்தி பாதுகாத்தல் காலத்தின் கட்டாயம் ஆகும்.எமது தேசிய வன விலங்கு பறவைகள் சரணாலயத்தை சிறியோர் முதல் பெரியோர்வரை கண்டு மகிழ்ந்திட பழக வழிவகை செய்ய வேண்டும். இவ்வகை சரணாலயங்கள் உலக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றலா உல்லாசப் பிரயாணிகளை மிகவும் கவர்ந்து இழுக்கும். இதன் மூலம் தமிழீழம் மேலதிக வேலைவாய்ப்பினை அந்நிய செலவாணியை ஈட்டும் என்பதில் ஐயம் இல்லை. உல்லாசப் பிரயாணிகள் சிறியோர் முதல் பெரியோர்வரை கண்டு கழித்து மகிந்திட வாகன வசதிகளை தமிழீழவன உயிரினங்கள் பாதுகாப்பகம் செய்ய வேண்டும். உலகில் கிட்டத்தட்ட இரு நூறு மில்லியன் மக்கள் காடுகளைச் சார்ந்தே வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் காடுகளிலேயே கிடைத்து வருகின்றன. மூடவைத்தியம் மூடநம்பிக்கை போன்றவற்றிக்காக உலகில் பல வன உயிரினங்கள் கொல்லப் படுகின்றன. தமிழீழத்திலும் இது நடை பெறுகிறது.

முன்னேற்றத் திட்டங்கள் என்ற போர்வையில் தமிழீழக்காடுகள் அழிக்கப் பட்டால் நம்முடைய நிலம், நீர், காற்று வளங்கள் பாதிக்கப்பட்டு சுற்றுப் புறசூழல் கெடுவதோடு காலம் காலமாக காட்டோடு இணைந்து வாழ்ந்த இம்மக்களின் வாழ்வும் மண்ணோடு புதைந்து போகின்றது. ஆகவே தமிழீழ வனங்கள் வன உயிரினங்களை காப்பது பாதுகாப்பது அத்தியவசியமாகும். தமிழீழ மக்களுக்கு காடுகள் வன உயிரினங்கள் ஏன் பாதுகாக்கவேண்டும் அதன் மிக அவசியம் பற்றி துண்டுப் பிரசுரங்கள் விளக்கவுரைகள், கூட்டங்கள், புத்தகங்கள் வாயிலாக விழிப்புணர்ச்சியை உடன் ஏற்படுத்த வேண்டும். தெரியப்படுத்த வேண்டும்.

உலகில் பூமி அதிர்ச்சி வெள்ளப் பெருக்கும், சூறாவளி, கடும் மழை, வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் காடழிப்புக்களால் ஏற்படுகின்றன. காடுகளில் மனிதன் கைவைப்பதனால் இயற்கை சமநிலை குழம்பி பேரழிவு ஏற்படுகிறது. வங்களா தேசின் வெள்ளப்பெருக்கும் எத்தியோப்பியாவின் வறட்சிக்கும், வறுமைக்கும் காடழிப்பே காரணமாகும். மனிதன் இயற்கையை வென்று விட்டதாக மாயையில் வாழ்ந்து இறந்து போகின்றான். இயற்கையை யாராலும் வெல்ல முடியாது. இயற்கையோடு இசைந்து போவதே சாலச்சிறந்தது பூமியின் ஒரு பகுதியில் வெள்ளப்பெருக்கு கடும் மழை, மறுபுறத்தில் வறட்சி, வறுமை, பூமி அதிர்ச்சி, சூறாவளி, எரிமலை போன்றவற்றுக்கு முக்கிய காரணம் காடழிப்பு ஆகும். மனிதன் காடுகளை வன உயிரினங்களை தொடர்ந்து முன்னேற்ற விவசாயக் குடியேற்ற கைத்தொழில் பொருளாதார சேனைப் பயிர்ச் செய்கைக் காரணங்களுக்காக அழிப்பதனால் தொடர்ந்து மனிதன் பூமியில் வாழத்தகுதியற்றுப் போய்விடுகின்றான். பூமியின் ஆயுளையும் குறைக்கின்றான். உலக மற்றும் தமிழீழ இயற்கை ஆலயங்களை ஒன்று திரட்டி மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழக மாணவர்கள் உயிரியல் ஆராச்சி யாளர்கள் உயிரியல் விஞ்ஞானிகள், வன உயிரினங்கள் ஆராச்சி எழுத்தாளர்கள், தமிழீழ மக்களை ஒன்று சேர்த்து தமிழீழ வனங்களை வன உயிரினங்களை பாதுகாக்க பாரிய திட்டம் தீட்டப் பெற்று செயற்படுத்த வேண்டும். தமிழீழத்தில் வன உயிரி னங்கள் வேகமாக அழிந்து வருகின்றன. அதனைத் தடுக்க உடன்செயற்பட வேண்டும். தமிழீழ வன உயிரினங்கள் சமூக விரோதிகளால் வேட்டையாடப்பட்டு வருவது இயற்கை. ஆலயங்கள் மட்டுமன்றி இதயமுள்ள எந்த மனிதனையும் கவலையில் ஆழ்த்துவதும் ஆத்திரமடையச் செய்வதுமாகும். தமிழீழத்தின் ஆதார வேர்களை பாதுகாக்க உடன் செயலில் இறங்குவோம். ■

---

## உள்ளத்தை உறுத்துபவை

வன்னியில் சில பிரதான வீதிகள் தற்காலிகமாக திருத்தப்பட்டுள்ளன. இதனால் ஆமை வேகத்தில் ஓடிய வாகனங்கள் எல்லாம் குதிரை வேகத்தில் ஓடத் தொடங்கிவிட்டன.

இந்தக் கடுகதி வேகத்தால் எழும் தூசு மண்டலம் கண்களின் பார்வையை முற்று முழுதாக மறைத்து விடுகின்றது.

சில நேரங்களில் பாதசாரிகள் வாகன சாரதிகளை நோக்கி கைகளை நீட்டித் திட்டித் தீர்க்கும் காட்சிகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கப்பால் வேதனை தரும் நிகழ்வுகளும் நடைபெறுவதை இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியமானது.

பிரதான வீதிக்கூடாக பிரயாணம் செய்யும் போது தினசரி காணும் நிகழ்வாக போய்விட்டது.

வீதிகளில் ஆங்காங்கே வாகனங்களால் மோதுண்டு இறந்து போய் கிடக்கும் வீட்டு வளர்ப்பு பிரயாணிகளான ஆடு; மாடு,நாய், பூனை கோழிகளைக் காணக்கூடிய தாக இருக்கின்றது.

அதிலும் வீடுகளில் அதிகமாக வளர்க்கப்படும் நாய்களின் கதிதான் அதிக வேதனைக்குரியதாக இருக்கின்றது.

ஏனென்றால் வீட்டில் பெருகிவிடும் நாய்க்குட்டிகளை அகற்றிவிடுவதற்காக யாரும் இல்லாத குடியிருப்புக்கள் ஏதும் இல்லாத இடங்களில் இவற்றை அநாதரவாக விட்டுச்செல்கின்றனர்.

இவ்வாறு விட்டுச்செல்லும் நாய்களே அதிகமாக இறந்து கிடப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதைக் கொஞ்சம் கவனம் எடுத்து குடியிருப்புக்கள் உள்ளபிர தேசங்களில் விட்டால் இவை தப்பிப் பிழைத்துக்கொள்ளும்.

இதேவேளை வாகனச்சாரதிகளும் இயன்றவரை இவற்றைத் தவிர்த்துக்கொள்ள முயல வேண்டுமல்லவா?

வேழினி

# விண்வெளிப்போரில் சீனப்போர் விமானிகள்

**காலம் கி.பி.** 2010 அமெரிக்கரை தாங்கிய டிஸ்கவரி விண்கலம் வியாழன் கோளை நெருங்கி உறை பனிப் படலங்களால் சூழப்பட்ட யூரோப்பா உபகோளை நெருங்கிப் பறந்து கொண்டிருந்தது. 1979ல் வோஜேயர் விண்கலம் யூரோப்பாவில் நீர் உறை பனியாக இருப்பதைக் கண்டுபிடித்தது. அதில் உயிரினம் இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

திடீரென யூரோப்பாவிலிருந்து ஒரு வானொலி சமிக்ஞை டிஸ்கவரிக்கு கிடைக்கிறது. அது யூரேப்பாவிலிருந்து பூமிக்கு அனுப்பப்படும் செய்தியாக இருந்தது. 'யூரோப்பாவில் உயிர்கள் இல்லை - யூரோப்பாவில் உயிர்கள் இல்லை' என அச்செய்தி கூறியது. யூரோப்பாவிலிருந்து டிஸ்கவரிக்கு கிடைத்த கடைசிச் செய்தி இதற்கு முன் யூரோப்பாவில் அவர்கள் கண்டகாட்சி - விண்வெளி வல்லரசுகளான அமெரிக்காவையும் - ரஸ்யாவையும் அதிர்வுறவைத்ததாகும்.

சீன விண்கலம் ஒன்று வெகு நிதானமாக யூரோப்பாவின் முகில்களை ஊடறுத்து தரையிறங்கியிருப்பதே அந்த அதிர்வுறும் விடயம். அதிலும் சீனர்கள் சென்றிருப்பது முக்கியமான விடயம்.

1970 களில் வொஜேயர் விண்கலங்களும் 1980களில் கலிலியோவும், 1990களில் கெப்ளர் கலங்களும் யூரோப்பாவை பற்றி பெற்றதைவிட சீனர்கள் யூரோப்பா பற்றி மிக அதிக தகவல்களைப் பெறவுள்ளது மிகப்பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

யூரோப்பாவில் இறங்கிய சீனர்கள் தமது கலம்மூலம் அதன் உறைபனிப்படலத்தை துளையிடுகின்றனர். துளையிட்டவர்கள் அதன் வழி ஒரு நீண்ட குழாயைச் செலுத்துகின்றனர். அதன் மூலம் நீரை எடுத்து நீரைத் தனி ஒக்சிசன், ஐதரசன்களாகப் பிரித்து தமது விண்கல எரிபொருளாக பயன்படுத்த சீனர்கள் - முயல்கிறனர். இது நடந்து கொண்டிருக்கும் போதுதான் "யூரோப்பாவில் உயிர்கள் இல்லை" என்ற இறுதி வானொலி தகவல் வந்தது. அதன் பின் தொடர்புகள் ஏதும் இல்லை. அந்தச் சீனர்களுக்கு என்ன நடந்தது?

இது விண்வெளி புனைகதையாளர் ஆர்தர்சி கிளாக் தனது '2010 ODYSSEY TWO' நாவலில் குறிப்பிடப்பட்டது. இவரது எதிர்வு கூறல்கள் நிறைவேறி வருகின்ற போதும். பன்னாட்டு அரசியல் - நெருக்கீடுகளால் பல நிறைவேறவில்லை.

சீனாவின் நிலையும் இதுதான்.

எதிர்வரும் ஏப்ரலில் சீனர்களை - தனது விண்கலம் மூலம் சீனா விண்வெளிக்கு அனுப்பவுள்ளது. சீனர்கள் எதிர்வு கூறலின்படி 2010ல் சீனர்கள் யூரோப்பாவிற்கு சென்றிருக்க வேண்டும். ஆனால் அரசியல் காரணத்தால் அது 30 ஆண்டுகள், தாமதமாகி வருகின்றது.

அமெரிக்காவும் - சோவியத்தும் 1961ல் இருந்து மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பி வருகின்றன. இதுவரை 2 நாடுகளும் உடைக்க முடியாத சாதனையாகவும் இருந்து வருகின்றது, இதனை உடைக்கும் நாடாக சீனா இப்பொழுதே மாறியுள்ளது.

உண்மையில் சீனா 1970ல் Dawn -1 என்ற விண்கலமூலம் இரு சீனர்களை விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டிருந்தது. 1970ல் இதற்காக தனது விமானப்படையிலிருந்து. 19 விமானிகளை தெரிவு செய்து பயிற்சிகளையும் முழுமையாக வழங்கியிருந்தது.







ஆனால் சீனாவில் இடம் பெற்ற கலாச்சாரப்புரட்சி ,1971ல் தலைவர் மாவோசேதுங் ஆட்சிக்கான சதிப்புரட்சி முயற்சி, ஆகியவற்றில் அது கைகூடாது முடங்கிப் போனது. சீனா பின்னர் அமைதி நிலைக்கு வந்த பின்னரும். பொருண்மிய நெருக்கடி அதனை மனித விண்பயணம் மேற்கொள்ள இடம் வழங்கவில்லை. செய்மதிகளை அனுப்புவதுடன் அதன் விண்பயணங்கள் மட்டுப்பட்டன.

மீண்டும் 1990களில் மனிதர்களை (சீனர்களை) விண்வெளிக்கு அனுப்ப சீனா மிடுக்குக் கொண்டது. 1992முதல் இதற்கான நடவடிக்கையில் சீனா ஈடுபடத்தொடங்கியது.

சீனத் தலைவர் 'சியாங் செமினின்' ஆசீர்வாதத்துடன் 'திட்டம் 921' (Prosect 921) என்ற பெயரில் 1992ல் மனித விண்பயண முயற்சி சீனாவினால் மீண்டும் தொடங்கப்பட்டது. 1996ல் தனது விமானப்படை மிகையொலி தாக்குதல் விமானிகள் இருவரை ரஸ்யாவின் விண்பயண பயிற்சி நிலையமான 'Star City' யில் பயிற்சி பெறவைத்தது. தவிரவும் - தனது விமானப்படையில 2000 விமானிகளிடம் சோதனை வைத்து இறுதிப்பயிற்சிக்காக அவர்களில் 12பேரை தெரிவு செய்தது. மனிதப்பயிற்சிகள் ஒரு புறம் நடக்க மறுபுறம் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்ந்தன. 'Shanghi Academy Of Space Flight Technology' என்ற சீனாவின் விண்வெளிப்பயண நிறுவனம் 'சாஸ்ட்' என்ற அதன் சுருக்கப் பெயருடன் தொழில்நுட்ப நடவடிக்கையை மேற்கொண்டது.'கீ பரேன் (Qi Faren) என்ற முதன்மை விண்கல புனைவரைவாளர், வாங்யொன்ஸி (Wangyon gz) என்ற சீனா விண்மனிதப்பயணத்திட்ட முதன்மை விஞ்ஞானி ஆகியோரின் தலைமையில் விண்கல கட்டுமாணங்கள் நடைபெற்றன. மனித விண்பயணத்துக்கான தமது இலக்கான முன்னோடி மாதிரியாக - ரஸ்யா, விண்மனிதப்பயண விண்கலமான 'சோயுஸ்'ன் வடிவத்தை சீனாவின் புனைவரைவாளர்கள் தெரிவு செய்தனர். சோயுஸ் ரஸ்யா இன்றுவரை பயன்படுத்தும் 3ம் தலைமுறை விண்கலமாகும். இதன் மாதிரியில் சீனா மனிதப்பயண விண்கலத்தை காட்டத்தொடங்கியது. விண்கல செலுத்துகைக் கென "லோங்மார்ச் 2F' என்ற ரொக்கட்டை வடிவமைத்தது . இதன் சீனமொழிப் பெயர் 'சாங்செனி 2F' (Chang Zheny 2F) ஆகும்.

இதன் மூலம் மனிதர்களை காவிச்செல்லும் விண்கலத்துக்கு சென்ஸ்ஸ" எனப் பெயரிடப்பட்டது. சென்ஸ" என்ற சீனச் சொல்லின் பொருள் 'மந்திர கலம்' என்பதாகும்.

'சென்ஸ"' விண்கல கட்டமைப்பு இதுதான்.

**உந்து கலம்.**

சென்ஸ"வின் அடிப்புறம் 2.94 மீற்றர் நீளமும் - 2.8 மீற்றர் விட்டமுடைய ஒரு உருளை அதன் இருபுறங்களில் 24 சதுர மீற்றர் பரப்புடைய சூரிய மின்கலத்தகடுகள் பொருத்தப்பட்டி ருக்கும். ரொக்கட் பறப்பின்போது இது மடித்து வைக்கப்பட்டிருக்கும். சுற்றுப் பாதைக்குச் சென்றதும் சூரிய மின்கலத்தகடுகள் விரியும் இதன் மூலம் பெறும் மின்சா

த.அருவி

ரத்தை இந்த உருளைப் பகுதியில் உள்ள மின்கலம் சேமித்து விண்கலத்துக்கு வழங்கும். அத்துடன் இதில் ஒரு ரொக்கட் எஞ்சினும்இருக்கும்.இது பாதையை



சரிசெய்ய உதவும். விண் கலத்தின் இந்த உருளைப்பகுதி 'உந்துகலம்' எனப்படும்.

**சுற்றுக் கலம்**

சென்ஸ"வின் அடிப்புற உந்து கலத்தின் மேல் பொருத்தப்படும் 2.8மீற்றர் நீளமும் - 2.2மீற்றர் விட்டமும் கொண்ட உருளைப்பகுதி சுற்றுக்கலம் ஆகும்.

இதில் 12 சதுர மீற்றர் பரப்புடைய சூரிய மின்கலத்தகடுகள் இருபுறமும் பொருத்தப்பட்டிருக்கும். விண்கலம் பூமியைச் சுற்றுகையில் இதனுள் மனிதர்கள் இருப்பார்கள ஆய்வுப்பகுதிகள், உணவு குளியலறை எல்லாம் இதனுள் இருக்கும். சூரிய உணரி, தொடர்புக் கருவி அன்ரெனா, என்பனவும் இதில் அமைந்திருக்கும். இதன் மேற்புறம் நுழைவாயில் கதவு இருக்கும்.

**பயணக்கலம**

சுற்றுக்கலத்தின் நுழைவாயில் உடன் ஒரு அரை உருளை வடிவில் 2.059 மீற்றர் நீள அகலப்பகுதி இருக்கிறது. இதனுள் விண்கல கட்டளைப் பகுதி இருக்கும். விண்பயண ஆரம்பத்தில் வீரர்கள் இதிலேயே இருப்பர். சுற்றுப் பாதைக்கு விண்கலம் சென்றதும் இதனுள் இருந்து விண்வெளி வீரர்கள் கதவைத் திறந்து சுற்றுக்கலத்துக்குச் செல்வார்கள்.

தரையிறக்கும் வேளையில் சுற்றுக் கலத்திலிருந்து விண்வெளிவீரர்கள் பயணக் கலத்துக்கு வருவர். பயணக் கலம் 2கதவுகளைக் கொண்டது. ஒரு கதவு சுற்றுக்கலத்துக்கானது. மறுகதவு மேற்புறம் இருக்கும். அது தரையிறக்கத்தில் வீரர்கள் வெளியேறுவதற்கானது.

இந்த வடிவமைப்புடைய சென்ஸ" தரையிறக்கத்தின் போது சுற்றுக்கலத்திலிருந்து பயணக்கலம் கழற்றப்படுகின்றது. இப்பயணக்கலம் பூமியின் ஈர்ப்பு விசைக்குள் இறங்கி - வளிமண்டலத்துள் உராய ஆரம்பிக்கின்றது. உராய்வின் போது ஏற்படும் உயர் வெப்ப



நிலையை விண்கல சிலிக்கன் சுவர் தாங்கி விண்கலம் தெரியாது காக்கிறது. இந்த உராய்வின் பின் பூமிக்கு நெருக்கமாக விண்கலம் வரும் போது - அதன் மேற்புறமுள்ள பாரிய பரசூட் விரிந்து சென்ஸ"வின் பயணக்கலத்தை மெதுவாக தரையிறக்கும்.

சீனா தான் கட்டமைத்த சென்ஸ" -1 விண்கலத்தை மனிதர் இல்லாது 1999 - நவம்பர் 20ல் விண்ணுக்கு செலுத்தியது. 1நாள் அது பூமியை வலம் வந்தது. அதன் பயணக் கலம் பத்திரமாக மொங் சோலியாவில் தரையிறங்கியது.

சென்ஸ" -2 2001 ஜனவரி 10ல் செலுத்தப்பட்டது. அது பூமியை 108 தடவைகள் வலம் வந்தது. அதன் பயணக் கலம் பூமிக்கு பத்திரமாக திரும்பிய போதும், சீனாவின் சென்ஸ" -2 மேற்குலக ஊடகங்களால் மறைக்கப்பட்டது. ஆனால் அது வெள்ளி என சீனா அறிவித்தது சென்ஸ" -2 விண் சுற்றுக்கலப்பகுதி பூமியை 9 மணித்தி யாலங் களாக வலம் வந்து ஆராய்ந்தது.

இதன் போது சென்ஸ" -3 கடந்த மாதம் செலுத்தப்பட்டது, சென்ஸ" -3ம் பத்திரமாக பூமிக்கு மீண்டது. சென்ஸ" -3 வெற்றியளிக்கும்வரை - சீனா தனது மனிதப் பயணத்தை அடுத்த ஆண்டு சென்ஸ" 6 விண்கலத்துக்கு ஒத்திவைத்திருந்தது.

சென்ஸ" -3ன் வெற்றியை அடுத்து சீனா தனது முதல் மனிதப் பயணத்தை சென்ஸ" - 5க்கு மாற்றி அதனை ஏப்ரல் மாதத்துக்கு முன்னகர்த்தியுள்ளது.

இதற்கிடையில் பயணிக்கப் போகும் சென்ஸ"-4 கடலில் தரை யிறக்கவுள்ளது. முதல் 3 சென்ஸ"க்கள் தரையிலேயே இறக்கப்பட்டன.

சென்ஸ" -5ல் செல்லவுள்ள 12 விண்வெளி வீரர்களை சீனா தெரிவுசெய்துள்ளது. இதில் இருவரே சென்ஸ" -5ல் செல்லவுள்ளனர். அவர்கள் இருவரும் யார் என்பது தெரிவு செய்யப்படவில்லை.

அமெரிக்காவும் - ரஸ்யாவும் தமது முதல் பயணத்தை ஒவ்வொரு விண்வெளி வீரர்களுடன் ஆரம்பித்தது. ஆனால் சீனா தனது முதல் மனிதர் பயணத்தை 3ம் தலைமுறை விண்கலம் மூலம் ஆரம்பிப்பது முக்கியமானது.

இந்த முதல் சீனா மனிதப்பயணத்துடன் சீனா 30 ஆண்டுகளில் சந்திரனில் கால் பதிக்கவும் திட்டமிட்டுள்ளது. 1969 முதல் 1972 வரை அமெரிக்கர் மட்டுமே சந்திரனில் கால் பதித்தது. அதன்பின் சந்திரனுக்கு மனிதப் பயணங்கள் எதுவும் நிகழவில்லை. அமெரிக்கா தனது விண்பயண வீரர்களுக்கு 'அஸ்ரோநட்ஸ்' (வான் வலவர்) Astronauts என்ற பெயரைச் சூட்டியது. சோவியத் Cosmonauts (அண்டவலவர்) என்ற பெயரை இட்டது.

சீனா தனது விண் பயணிகளுக்கு 'யுவான் கியான்ஸ்' (Yuhan gyuans) என்ற பெயரைச் சூட்டியுள்ளது.

சீனர்கள் உலகின் அறிவியலில் பல்வேறு நடவடிக்கைகளின் முன்னோடிகள். விண்வெளியிலும் அமெரிக்கா - ரஸ்யா ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக தனித்துவ சக்தியாக வளர்ந்துள்ளது என்பதை ஏப்ரலில் சீனரின் மனிதப் பயணம் உணர்த்தும்.

அதேவேளை கடந்த காலங்களில் ரஸ்யா தனி விண் இல்லங்களைக் கட்டியது. இப்பொழுது தனித்த நாடாகவல்லாது இதில் அமெரிக்காவும் அடங்கும். உலகநாடுகளை இணைத்து சர்வதேச விண்கலத்தை கட்டியுள்ளது.

ஆனால் சீனா அடுத்தடுத்த ஆண்டுகளில் தனித்த விண் இல்லத்தை விண் வெளியில் அமைக்கவும், திட்டமிட்டுள்ளது.

எழுத்தறிவு, கல்வியின் முடிவு அல்ல; அது அதன் தொடக்கமும் கூட அல்ல. - மகாத்மாகாந்தி.







# குதூகலம்

## பணம் கிடையாது

தென் அமெரிக்க நாடு ஒன்றில் உயர் அதிகாரி ஒருவர் சனாதிபதியிடம் சென்று "ஐயா" நம் நாட்டில் லஞ்சப் பேய் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது" என்று கூறினார்.

சனாதிபதியும் "நல்ல சேதிதான் லஞ்சம் வாங்குபவர்களையெல்லாம் தீர்த்துக்கட்டிவிட்டார்களா என்று கேட்டார்.

அதிகாரி பதில் கூறினார் அப்படி இல்லை நாட்டில் இனிக் கொடுக்கவோ, வாங்கவோ பணம் என்பதே கிடையாது என்று.

## சாம் மானக்ஷா

ஒரு முறை சாம் மானக்ஷா இராணுவ உயரதிகாரியாக இருந்தபோது சில இராணுவத்தினருடன் சட்லெஜ் நதியை மோட்டார் படகு மூலம் குறுக்கே கடந்து போய்க் கொண்டிருந்தார். நதியில் வெள்ளம் பெருகி விட்டது. திடீரென்று படகில் எஞ்சின் பழுதடைந்து இயங்க மறுத்தது. படகோ அடித்தோடும் வெள்ளத்தில் சிக்கிச் சுழன்று நீர்போகும் திசையில் பயங்கரமான பள்ளத்தை நோக்கிப் போக ஆரம்பித்து விட்டது. படகிலிருந்து இராணுவத்தினரோ தங்களின் பொருட்கள் எல்லாவற்றையும் நீரில் எறிந்து விட்டு நீந்திக் கரைசேர ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் மானக்ஷாவோ ஒரு பரபரப்பும் காட்டாமல் இருந்த இடத்திலேயே மீசையைத் தடவியபடி உட்காந்திருந்ததார். படகு ஆபத்தில் சிக்குவதை எதிர்க்கரையில் நின்று அவதானித்த சிலர் உதவிக்கு வேறொரு படகைச் செலுத்திக் கொண்டு வந்து காப்பாற்றினார்கள். ஒரு இராணுவ அதிகாரி கேட்டார் " சேர் இவ்வளவு ஆபத்திலும் நீங்கள் தைரியமாய் உட்காந்திருந்தீர்களே. அடேயப்பா என்று வியப்புடன் கேட்டார்" அதற்கு மானக்ஷா "மற்றவர்களைப்போல் நானும் எனது பொருட்களை எறிந்து என்ன பிரயோசனம் எனக்குத்தான் நீந்தத் தெரியாதே" என்றார் புன்னகையோடு.

## முல்லாவின் தந்திரம்

முல்லா நசிருதீன் ஒருநாள் இரவு ஒரு சத்திரத்தில் தங்கினார். சத்திரத்தின் முதலாளிக்கு முல்லா இங்கு தங்குவது பற்றி மகிழ்ச்சி. இரவில் ஏதேனும் வேண்டுமானால் தயங்காமல் குரல் கொடுங்கள் என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்று விட்டார்.

நடு இரவில் நசிருதீனுக்கு தாங்க முடியாத தாகம் ஏற்பட்டது. "தண்ணீர், தண்ணீர் என்று பல தடவை கத்தியும் பலனில்லை தொண்டை வறண்டு விட்டது. உடனே நெருப்பு நெருப்பு என்று கூச்சல் போட்டார் முதலாளி உட்பட அனைவரும் பாத்திரங்களில் தண்ணீர் கொண்டு ஓடிவந்து நெருப்பு எங்கே என்று கேட்டபோது அவர் அமைதியாகத் தனது வாயைத் திறந்து கொண்டேசைகை செய்தாராம்.

# ஸ்ராலின் கிராட்டும் மாங்குளமும் வீரத்தின் நிலம்

**ஏறத்தாள** ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் ஒரு பொழுது. அதாவது இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒருகாலம்.

சகாப்தம் படைத்தஸ்ராலின் கிராட் நகரிலிருந்த கிராஸ்னி அக்தியாபர் தொழிற்சாலைக்கும் "பாரிக்காதி" தொழிற்சாலைக் கும் இடையில் வோல்கா விலிருந்த மேற்கு நோக்கிய ஒரு பள்ளத்தில்

உம்---உம்---உம்---

தட---தட---தட---

உம்--உம்--உம்--

என்ற பேரிரைச்சலோடு முட்டிமோதி முழங்கிய குண்டதிர்வோடு நாசிகளின் யுத்த டாங்கி யொன்று சோவியத்தின்



கடல் காலாட்படையினர் நிலை கொண்டிருந்த ஒரு அரண் நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.----

இதேபோன்று ஏறத்தாள ஐந்து தசாப்தங்களுக்கு பின்னர் ஒரு பொழுது "இறுதி வெற்றி" யெனப் பெயரிட்டு புலிகளிற் கெதிரான ஜெயசிக்குறு சமரினை எதிரி நடத்திக் கொண்டிருந்த ஒரு பொழுது

மாங்குளத்தின் மையத்தில் எல்லை வேலியிட்டு எதிரிகளோடு புலிகள் பொருதிக் கொண்டிருந்த ஒரு நாள் புலிகளின் அரண்களை உடைத்து நொறுக்கியபடி ஒரு டாங்கி

உம்---உம்---உம்---

தட---தட---தட----

உம்---உம்---தட---

என்ற இரைச்சலோடு எதிரியின் டாங்கியொன்று விரைந்து கொண்டிருந்தது.-----

யுத்தங்கள் நெஞ்சு கனக்கும் நினைவுகளை கொண்டவை. அதிலும் அந்த யுத்த களங்களில் நடந்தேறும் தியாகங்கள் காலங்களை வெல்லும் நினைவுகளாக இருப்பவை.

யுத்தங்களைப் பற்றி எவரும் பேசினால் இரண்டாம் உலகப் போரைப் பற்றி பேசாமல் எவரும் யுத்தத்தைப் பற்றிப் பேச



முடியாது.

யுத்தத்தின் அனர்த்தங்களைப் பற்றி எவரும் சிந்தித்தால் இரண்டாம் உலகப் போரின் போது கொல்லப்பட்ட அறுபது இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்களைப் பற்றி எவரும் சிந்திக்காமல் இருக்கமுடியாது.

இதேநேரம் யுத்தகளத் தியாகங்களைப் பற்றி எவரும் பேசினால் இரண்டாம் உலகப் போரின் முடிவிற்கு அச்சாணியாக இருந்ததும், இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரின் நாசிப் படைகளிற்கு மரணகுழியாக இருந்து சகாப்தம் படைத்த ஸ்ராலின் கிராட்டில் நடந்த சண்டைகளின் போதான தியாகங்களை எவரும் பேசாமல் இருக்க முடியாது.

அதாவது இங்கே நீண்ட படையெடுப்பாக இருந்த ஜெயசிக்குறுச் சமரிற்கான புலிகளின் எதிர்ச் சமரின் போது புரட்சிக் களமாக மாறிய புளியங்குளத்தையும் மரணக் கிடங்காகவிருந்த மாங் குளத்தையும் போல இரண்டாம் உலகப் போரில் ஸ்ராலின் . கிராட்.

இவை தியாகங்களின் மையமெனலாம். இவ்வாறு தியாகங்களுக்குள் வீரம் செறிந்த தியாகமாகிப் போனவற்றில் இரு சிறுபொறிகள் தான் இவை.

பல நாடுகளையும் இலகுவாகக் கைப்பற்றிய நாசிகள் அத்தனை இலகுகளில் ஸ்ராலின் கிராட்டைக் கைப்பற்ற முடியவில்லையேயென்று ஸ்ராலின் கிராட்டின் பரந்த நிலப்பரப்பில் திணறிக் கொண்டிருந்தனர்.

இப்போது நாங்கள் இரண்டாம் உலகப் போரின் காலத்திலிருந்த ஸ்ராலின் கிராட்டின் வோல்கா

**சிறி. இந்திரகுமார்**

நதிப்பள்ளத்தாக்கிற்கு விரைவோம்.

உங்கள் கண்களையும் செவிகளையும் கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால், இன்று நீங்கள் ''மமாயெவ்'' குன்றில் சிலை வடிவில் வடிவமைப்பதற்குக் காரணமான ஒரு அற்புதமான வீரத்தியாகத்தைக் காணப்போகின்றீர்கள்.

அதோ-----

சோவியத்தின் கடல் காலாட்படை பட்டாலியன்கள் நிலை கொண்டிருந்த நிலைகளை நோக்கி நாசிகளின் டாங்கிகள் பாயத்தொடங்கி விட்டன-----

டும்---டும்---டும்---

உம்--உம்---உம்--

ஆ---ஆ--- எங்கும் ஒரே புகைமண்டலம். யுத்தம் தொடங்கி விட்டது.எப்படியாவது நாசிகளின் டாங்கிகளைத் தகர்த்தெறிந்தேயாக வேண்டும்.

இல்லையேல் வலிமை மிகு ஸ்ராலின் கிராட்டிற்கான பாதுகாப்பை செஞ்சேனைப் படைகள் இழந்து போகக் கூடும்.

இப்போது மாலுமி பனிக்காஹா இருந்த காப்பகழியை நோக்கி டாங்கிகள்.

டும்---டும்---

எனக்குண்டுகளை பீரங்கிகளால் பொழிந்தபடி முன்னேறத் தொடங்கி விட்டன.

துப்பாக்கி வேட்டொலிகளும் வெடியோசைகளும் முழங்கும் இவ்வேளையில் மாலுமி பனிக்காஹா இருந்த காப்பகழியில் என்ன நடக்கிறது. கைவசம் இருந்த எறிகுண்டுகளும் அல்லவா தீர்ந்து போகின்றன.

கைவசம் இருப்பது இ ர ண டே இரண்டு எரிபொருள் கலவை அடங்கிய போத்தல்கள் மட்டும் தானே------

எப்படியாவது முன்னேறும் டாங்கியை நிறுத்தியேயாக வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் எதிரியிடம் நிலைகளைப் பறிகொடுப்பதாகவே அமையும்.

மெல்லத் தலையை காப்பகழியின் மேல் நீட்டி ஒரு எரிபொருள் போத்தலை உயர்த்தி முன்னேறும் டாங்கியை குறிவைத்தான் மிகயீல் பனிக்காஹா

டும்....ஆம்...

ஆ...அம்மா.... அம்...மா..

ஐயோ......நெருப்பு

மிகயீல் பனிக் காஹாவின் உடம்பெல்லாம் நெருப்பு. டாங்கிக்கு குறி வைக்கப்பட்ட எரிபொருள் போத்தல்கள் இப்போது பனிக் காஹாவின் உடம்பிலல்லவா தீயை மூட்டி விட்டது.

அந்த வீரனின் உடலெங்கும் பரவிய தீயின் வேதனையை அவனால் தாங்க முடியவில்லையே...

தீயோ உடல் முழுவதும் அல்லவா பரவுகின்றது. ஆனாலும் பனிக்காஹாவின் கரம் இரண்டாவது எரிபொருள்ப் போத்தலை இறுகப் பற்றுகிறதே.

உம்....உம்....உம்....

தட்...தட...தட....

உம்..உம்..உம்..

எதிரியின் டாங்கியொன்று பனிக்காஹாவின் காப்பகழியை நெருங்கிவிட்டது.

தீ உடல்முழுவதும் பரவியபோதும் சுய உணர்வை இழக்காத அந்தவீரன் என்ன செய்கிறான்.

தேசப்பற்றிற்கும் ஆக்கிரமிப்பிற்குமிடையிலான போராட்டமல்லவா இது. செஞ்சேனையின் வீரன் பனிக்காஹாவா? அல்லது ஸ்ராலின் கிராட்டை வீழ்த்தி விட துடிக்கும் நாசிகளின் டாங்கிப் படையா? யார் வெல்வார்?

அதோ தீப்பற்றியெரியும் உடலோடு காப்பகழியைவிட்டு வெளியே வந்து விட்டான் மிகையீல் பனிக்காஹா...

பற்றியெரியும் உடலோடும் எரிபொருள் நிரம்பிய போத்தலை இறுகப்பற்றிய கரத்தோடும் வேகமாக மிக வேகமாக ஓடிய மிகயீல் பனிக்காஹா. இறுமாப்போடு என்னை எவரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற வக்கிரத்தோடு முன்னேறிக் கொண்டிருந்த நாசிகளின் டாங்கியின் இயந்திரப்பகுதியின் மையத்தில் எரிபொருள் நிரப்பிய போத்தலோடு மோதிவிட்டான்.

டும்.....

மூண்டெழுந்து மூசிவிளாசும் தீயிற்குள் உங்கள் கண்களிற்கு முன்னாலேயே ஒரு சாதனையின் சகாப்தற்திற்குள் மறைந்து விட்டான் மிகயீல் பனிக்காஹா....

மீண்டும் அதே சத்தம

உம்...உம்...உம்...

தட்..தட..தட...

இதுஎங்கே? இது இங்கே மாங்குளத்தின் மையம். கையில் இறுகப்பற்றிய கைக்குண்டோடு எமது கதாநாயகன் மேஜர் அன்பழகன் புலிகளின் தடைகளை உடைத்துத் தாண்டும் சிங்களத்தின் டாங்கியை குறிவைத்து முன்னேறுகிறான்.

கும்...

அங்கேயும் இங்கேயும் பரவிய ஒரே தீதான் இந்த டாங்கியையும் தடுத்து நிறுத்தி விட்டது.செஞ்சேனையின் நாயகன் மிகையீல் பனிக்காஹா போல புலிச்சேனையின் நாயகன் மேஜர் அன்பழகன் டாங்கியின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தித் தகர்த்து தாயகம் காத்து விட்டான்.

ஸ்ராலின் கிராட்டில் வென்றது செஞ்சேனை.

மாங்குளத்தில் வென்றது புலிச்சேனை.

# அனுபவ அதிர்வுகள்



**இடைவிடாத** வாகனங்களின் ஓசை வீதியின் இருமருங்கையும் கைக்கடிகாரத்தையும் பார்த்த அந்தப் போராளி பெருமூச்சுடன் தன் தலையினை ஒரு தடவை தடவி விட்டுக் கொண்டான். கிளிநொச்சி வீதி வாகனங்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. யாழிலிருந்து வந்த பாரஊர்தி ஒன்றிலிருந்து அரைக் காட்சட்டை அணிந்த இளைஞன் வேகமாக இறங்கி பாதணிகளைக் கழற்றியவாறு தன் பின்சட்டைப் பையில் துளாவி எடுத்த சில நாணயங்களை கந்தன் ஆலய உண்டியலில் போட அங்கே "தம்பி.... தம்பி...." அவரை முதுமை முழுமையாகப் போத்திருந்தது. வறுமை அவர்கையிலிருந்த தகரப்பாத்திரமும் வெறுமையாகத் தொங்கியபையும் எடுத்துச் சொல்லின. "உங்களுக்கு வேறு வேலையே இல்லையா...? அங்கால போய்த்துலையுங்கோ. நிம்மதியா போக விடமாட்டங்கள்" என்றவாறு பாரஊர்தியில் நுழைந்து கொண்டான். வெறித்த பார்வையுடன் முதியவர் நகர, இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் போராளியை-

"தம்பி நீங்களும் புதுக்குடியிருப்பா போறியள்" அருகில் நின்ற பெரியவர்.

"ஓமண்ணை"

"பஸ் வருது வாங்கோ" என அழைத்தவாறு பேருந்தின் வேகத்திற்கு குறுக்கே தனது கையினை போட்டார். பேருந்து மூச்சைக் கக்கியவாறு உறுமலுடன் நின்றது.

"இப்பயாவது பஸ் வந்துதே' என எண்ணியவாறு படிகளில் காலைவைக்க...

"வேகமாக ஏறுங்கோ.. இந்த வாசல்ல நிக்கிறவையள் உள்ளுக்குப் போங்கோ அம்மா உங்களுக்குச் சொல்லுறது விளங்கேல்லையா...? அக்கா உங்களுக்குத் தனியச் சொல்லோணுமா...? என பஸ் நடத்துநர் எரிந்து விழுந்தார்.

"அண்ண புதுக்குடியிருப்பா....?"

"ஓம்"

"இந்தாங்கோ ரிக்கட்"

"அண்ண நீங்கள்"

"நான் சிறப்பு"

"சிறப்பு ஏத்தியாச்சு நீங்க இறங்குங்கோ. பஸ் நிக்கட்டும்" பேருந்து கிட்டத்தட்ட நூறு மீற்றர் தான் சென்றிருக்கும். எதுவுமே செய்ய முடியாத அந்தப்போராளி மௌனமாக பேருந்தின் மீதான பிடியைத் தளர்த்த அனைத்துக் கண்களும் ஒரு பரிதாப்பார்வையை அள்ளிவீசின. பேருந்தில் இருந்த பெரியவர்.

"தம்பிக்கு ஒரு காலும் இல்ல. இறக்கி விட்டிட்டான். ஏன் புதுக்குடியிருப்பு மட்டும் ஏத்திக் கொண்டு வந்தா குறைஞ்சா போயிடும். மற்ற பஸ் காறர் ஏத்திக்கொண்டு போறாங்கள். இவங்கள் தான் காசப்பாக்கிறாங்கள். காசுக்காக இந்தப் போராளியை...." என மீதி தடைப்பட தன்னுடைய ஆதங்கத்தை அருகிலிருந்தவரிடம் கொட்டித் தீர்த்தார்.

அருகிலிருந்தவர்

"அண்ண அவைக்குத் தானே சிறப்புப்பணி ஓடுது"

"சிறப்புப்பணி ஓடினாலும் அந்த தம்பி என்ன அவசரவேலைக்காக வந்ததோ தெரியேல்ல"

"ஓம்,என்னவேலையோ...?"

பெரியவர்,

"அந்த தம்பி காலைக் குடுத்தது நாங்களெல்லாம் சந்தோசமாய் வாழோணும், நிம்மதியா வாழோணும், சுதந்திரமாய் வாழோணும் எண்டுதானே. இந்த A-9 வீதியில எத்தின மாவீரற்ற இரத்தம் சிந்தியிருக்கும், எத்தின போராளிகளின்ர அங்கங்கள் சிதைஞ்சிருக்கும். அவர்களின்ர தியாகத்தால தான் இந்த றோட்டால இப்ப போறம் எண்டதை மறக்கக் கூடாது"

அருகிலிருந்தவர்

"ஓமண்ண இந்தக் காயப்பட்ட போராளிகளுக்கு உதவி செய்யாட்டி வேற ஆருக்கண்ண உதவுவாங்கள்" என தன்னுடைய வேதனையை அத்துடன் முடக்கிக் கொண்டார்.

**வி. தேவபாணு**

மனித உள்ளத்தின் கல்வி, தொட்டிலிலிருந்து தொடங்குகிறது. - தாமஸ் கோகன்.

# நேர்நோக்கு

## நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எவ்வகையிலும் முறியடித்து விடவேண்டும் என்ற முனைப்பு கடந்த ஓராண்டு காலமாகச் சமாதான விரோதிகள் மத்தியிலே இருந்துவரும் ஒன்றுதான். ஆயினும் இவ்ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிய மாதத்தில் அதற்கு ஏற்படுத்தப்பட்ட சோதனைகள் மிகப்பார தூரமானவையாகும்.

ஒன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைய வேண்டி ஏற்பட்ட நிகழ்வு. இரண்டாவது மானிப்பாயில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த பெண் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல். அதனைத் தடுக்க முயன்ற மக்கள் மீது படையினர் மேற்கொண்ட வன்முறை. மூன்றாவது திருகோணமலையில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த இரு பெண்போராளிகள் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டமை. நான்காவது வவுனியாவின் இராணுவ சீருடை சாராத இடுப்புப்பட்டியை அகற்றுமாறு பெண்போராளிகளை வற்புறுத்தியமை ஐந்தாவது நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீனவர்கள் மீது கடற்படையினர் நடத்தியதாக்குதல். ஆறாவது திருமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவியது மட்டுமல்லாது அங்கு நின்றஏழு போராளிகளைக் கைது செய்ய முயன்றமை.

இவ்வாறு போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்ட வன்முறைகளும் யுத்தநிறுத்த மீறல்களும் கெடுபிடிகளும் சந்தேகங்களைக் கிளப்புகின்றன. அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு வருடம் தாண்டியும் நடை முறையில் இருப்பது பிடிக்காதவர்கள் இந்தச் சம்பவங்களுக்குப் பின்னணியில் இருப்பதான சந்தேகமே இதுவாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பது பிடிக்காத பல்வேறு சக்திகள் தென்பகுதியில் உள்ளன. பொ.ஐ.மு, ஜே.வி.பி, சிகலஉறுமய போன்றவை மட்டுமல்லாது, வழமைபோல தென்னிலங்கையில் ஊடகங்கள் பல கூட சமாதானத்துக்கு விரோதமாகவே செயற்படுகின்றன. அவை இச்சம்பவங் களையெல்லாம் புலிகளின் ஆயுதக்கடத்தலாகவும், யுத்த நிறுத்த மீறல்களாகவும் சித்திரித்து சிங்களமக்கள் மத்தியிலே சமாதானத்திற்கு எதிரான வித்துக்களை விதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன.

இவற்றைக் கண்காணித்து தீர்ப்பு வழங்க வேண்டிய கண்காணிப்புக்குழு வினர் வெளியிடும் நழுவல் போக்கான அறிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விரத்தி நிலையை ஏற்படுத்தி வருகின்றது. நிலைமைகளை எப்படியாவது சமாளித்துவிடும் தன்மையே இவர்களிடம் காணப்படுகிறது. இதனால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தமிழ்மக்களாகவே இருக்கின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ்மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மைகள் எதனையும் பெற்றுத் தந்துவிடவில்லை என்பதை தமிழ் மக்கள் கதவடைப்புகள், போராட்டங்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றனர். படையினர் மேற்கொண்ட யுத்தநிறுத்த மீறல்களும் அடாவடிகளும் மக்கள் மத்தியில் துயர அலைகளையும் கோபாவேசத்தையும் மூட்டியுள்ளன என்பதனையும் இவற்றுக்கெதிராக மக்கள் நடத்திய போராட்டங்கள் வெளிப்படுத்தின.

ஆனால் இவை யெல்லாம் பயன் கொடுத்தனவா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழவே செய்கின்றது. இவ்வாறான ஒரு நிலைதான் தமிழ் மக்களை தமது சுயநிர்ணய உரிமை குறித்தும், தமது தலைவிதியைத்தாமே தீர்மானி ப்பது குறித்தும் சிந்திக்க வைத்தது. இதனை சிங்கள ஆட்சியாளர்களே பலமுறை சுட்டிக்காட்டவும் செய்துள்ளனர்.

ஆனால் அதே தவறினையே அவர்கள் மீண்டும் மீண்டும் செய்கின்றனர் என்பதும் வெளிப்படையான விடயமாகும். ஒரே தவறினைத் தொடர்ந்து செய்யும் சிங்களத் தலைமைகள் மாறுவது எப்போதோ? அப்போதே தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் ஏன் இலங்கைக்கும் நல்லது நடக்கும். தொடர்ந்தும் அதே தவறுகளைப் புரிந்து கொண்டிருக்கும் தலைமையினால் நல்ல மாற்றம் எதனையும் ஏற்படுத்திவிட முடியாது.

**வேலவன்**

02ம் பக்கத் தொடர்ச்சி..

அனைத்தையும் உற்றுப் பாருங்கள். அவை சொல்லும் கதைகளை உணர்ந்து பாருங்கள் இந்த மண்ணில் எப்பிடி மானுடம் ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியவரும்.

எப்பிடியான இராணுவ ஆக்கிரமிப்புக்கு புத்தசமயத்தின் பேரால், சிங்களமக்களின் பேரால் இந்த மண்ணும் இதன் மக்களும் பல தசாப்தங்களாக ஆளாகியுள்ளார்கள் என்ற உண்மைபுரியும்.

தங்களின் உயிர்வாழ்தலை நிச்சயித்துக் கொள்ள அவர்கள் நடத்திய போராட்டத்தின் வீரம் செறிந்த சரித்தி ரத்தை நீங்கள் புரிந்து கொள்ளவும் முடியும்.

சமாதான நகர்வுகள் ஓராண்டைத்தாண்டிவிட்டது.... அரசு பெருமையாகப் பிரச்சாரம் செய்கிறது. தென்பகுதிக்கு அமைதி திரும்பிவிட்டது என்றார்கள் அமைச்சர்கள்.

அதிலொன்றும் சந்தேகமில்லை.

ஆனால் வடக்கு கிழக்கு மக்களுக்கு..?

முகமாலை தாண்டினால் யாழ் நகர்வரை குறிவைத்த நிலையில் காவலரண்களினூடாக நீட்டப்பட்டிருக்கும் துப்பாக்கிகள்... இடையறாத இராணுவ நடமாட்டம்

பாரிய முகாம்கள்... தொடர் முட்கம்பிவேலிகள், பூட்ஸ் கால்களின் அதிர்வுகள் அந்நிய மொழியிலான அதட்டல்கள், அத்துமீறினால் சுடப்படுவீர்கள் என்ற அச்சுறுத்தல்கள், இராணுவ வாகனத் தொடர்களின் நகர்வுகள், உயர்பாதுகாப்பு வலயம் என்ற ஆக்கிரமிப்புகள்...

இவையெல்லாம் இன்னும் அப்படியே... மாற்றமேயில்லை. பெண்போராளிகள். 'பெல்ட்' கட்டக்கூடாது என்பவர்கள், நாளைக்கு நம்மவர்கள் வேட்டி கட்டக்கூடாது என சனாதிபதி உத்தரவிட்டால் வேட்டியை அவிழ்க்கவும் தயாராகி விடுவார்கள்...

இந்த நிலையில் அரசு சமாதான தீபத்தை ஏற்றுமாறு-ஓராண்டு நிறைவை கொண்டாடுமாறு அழைப்பு விடுத்தது. வேடிக்கையாக இல்லை...

'சமாதானம்' பேச்சில் உள்ளது. ஊடகங்களில் உள்ளது... பிரச்சாரங்களில் உள்ளது அதுவும் அனைத்தும் தென்பகுதியில் தான் உள்ளது. ஆனால் எமது பகுதியில்? விடைகாண முடியாத வினா இதுதான்.

■ ■

தென்பகுதிகள் சமா தான தீபம் ஏற்றப்படும் வேளையில் கும்மிருட்டில், குப்பிவிளக்கொளியில் காணாமல் போனது எமது உறவுகளை மட்டுமல்ல, பறிக்கப்பட்ட எமது சுதந்திரத்தையும், வாழ்க்கையையும், மண்ணையும் அந்நியக்கலப்படமற்ற எமது காற்றையும் தொலைதூர நட்சத்திரங்களின் கண்காணிப்பில் இன்னமும் தேடித் கொண்டு தான் இருக்கிறோம்.

SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

SONY

FD Trinitron

WEGA

சமதிரை (Flat TV)
தொலைக்காட்சிப்பெட்டி




சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சொனியை
வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டாம்"

சீடில்ஸ்

(சி-7275)

ஏக விநியோகஸ்தர் கிங் பரட்ஸ்

இல.20, பிரதான வீதி,
வவுனியா.

T.P: 23123

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 07



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 07

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

பெயர் :.................................................

முகவரி :.................................................

.................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 06



பரிசுக்குரியவர்
பொ. கலைமதி
கணேசபுரம்,
கிளிநொச்சி.

**பரிசுக்குரிய வரிகள்**

சமாதானம் வந்திடுமோ சும்மா?
சந்தேகந்தான் வருகிறது அம்மா!
பசியோடு கேட்கிறது, தாயிடம் குட்டி...

**பாராட்டுக்குரிய வரிகள்**

அகதியாய் வந்தவர்கள் அகதியாக்கி விட்டு அகன்றனரோ
ஐயோ, கயவர் குண்டுக்கு கடுவனை இழந்த கவலையோ!
நன்றியுடையவரே எஜமானைக் காணவில்லை என்ற கவலையா?
கலங்காதே உன்னையும் குட்டியையும் வன்னிமண்காப்பாற்றும்

பொ. நாகராசா
மாவட்ட வைத்தியசாலை
அக்கராயன் கிளிநொச்சி

"சுதந்திரமற்ற மண்ணில்
சுமையோடு நீ கலங்க
அறியாத உன் மகவு-உனை
அரவணைக்க எண்ணுகின்றதோ"

அனுஜா. அருந்தவநாயகம்
வேலணை. 04
.வேலணை.

தாய்க்குலமே எத்தனை சேய்களை நீ இழந்தாய்
தரணியில் அதையிட்டுக் கலங்குகிறாயோ- எனினும்
தளிர் ஒன்று உள்ளதை மறந்திடல் தகுமோ-அது
தாய்மையின் இலக்கை அறிந்து தரணியில் வாழ்ந்திடுமே!

த. வேவி
தண்ணீரூற்று
முள்ளியவளை

உம்மை வளர்த்தவர் யாரோ.
அவர் எந்த ஊரோ.
உம்மைத் தவிக்க விட்டுச் சென்றதால்
உணவின்றி வாடுகின்றீரோ.

ம. அபிசாந்
பாடசாலை முன்பாக
உடையார்கட்டு

உன் பாசமது உன்மீது படர்ந்திருக்க
உன் பார்வையது எதன்மீது படர்கிறதோ
உன் ஏக்கப் பார்வைதனை பசித்திருக்கும்
உன் பாலகன் அறிவானே!!

தி.நிலா
புளியம் பொக்கணைச் சந்தி,
பெரியகுளம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

# தமிழீழ தேசிய பெருவிளையாட்டுவிழா 2003




வெற்றியின் பின்னான கைகுலுக்கலில் யாழ்.அணி.



வெற்றிக்கேடயங்கள்



மன்னார் அணியுடன் மோதும் திருமலை அணி.



மன்னார் அணியை வெல்லும் யாழ் அணி.



பரபரப்பான ஆட்டத்தின் முடிவில் வென்ற திருமலை அணி.

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.